Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-17 | 02-08-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-165

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

# மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தேடி

# ஜே.வி.பி யுடன் சு.கட்சி இரகசியப் பேச்சு!

## அரசை ஆதரிக்கும் கட்சிகளுடனும் சந்திப்பு

(கொழும்பு)

**அடுத்த சனாதிபதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைக்கும் நோக்கில் ஜே.வி.பி யினரின் ஆதரவைப்பெற்றுக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரகசியமாக பேச்சு நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அரசாங்கத்தை ஆதரிக்கும் சிறுகட்சிகளுடனும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

இது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. தேர்தலின்போது ஐ.தே. கட்சியை தோல்வியுறச்செய்ய அவர்களுக்கெதிரான சக்திகளின் ஆதரவைப்பெற்றுக்கொள்வது கட்சியின் நோக்கமாகும் எனத தெரிவிக்கப்படுகிறது. அதற்காக சந்திரிகா கூட்டணியிலிருந்து விலகிச்சென்ற ஜே.வி. பி யுடனும், அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளுடனும் தீவிரபேச்சுக்கள் நடத்தி உடன்பாடு ஒன்றுக்கு வர தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவதென சனநாயக இடதுசாரி முன்னணி தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினரை சந்தித்துப் பேச ராஜபக்ஷ அழைப்பு விடுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ் தேசிய கூட்டமைப்பினரை சந்தித்துப் பேசுவதற்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகிறது.கடந்த சனிக்கிழமை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷ அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இதற்குப் பதிலளித்த ஈழவேந்தன், சந்திப்பதில் எமக்கு எந்த வித ஆட்சேபனையுமில்லை, ஆனால், முதலில் நீங்கள் எமது உணர்வினைப் புரிந்து கொள்ள வேண்டும், அத்துடன் ஜே.வி.பி யின் ஆதரவுடன் பதவியைப் பெற முயல்வது ஈழத்தமிழர்களின் உணர்வினை அவமதிப்பதாகவே இருக்குமென சுட்டிக்காட்டியுள்ளார்.

## மட்டக்களப்பில் கைக்குண்டுத்தாக்கு; மதுபானக்கடை ஊழியர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சின்ன ஊறணியிலுள்ள மதுபானக் கடையொன்றின் மீது நேற்று மாலை 3.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் மதுபானக் கடையில் பணியாற்றிய ஊழியரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சிவகுமார் (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைக்குண்டுத் தாக்குதல் நடத்திய நபர்கள் உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

## பஞ்சதர்மக் கொள்கையை ஏற்றால் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு

### - ஹெல உறுமய நிபந்தனை

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவின் பஞ்ச தர்மக் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாக பகிரங்கமாக அறிவிப்பாராயின் அவரை பொது வேட்பாளராகக் கருதி ஜாதிக ஹெல உறுமய பிறிதொரு வேட்பாளரை நிறுத்தாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைத் திட்டமிடல் உறுப்பினரான பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜாதிகஹெல உறுமயவின் சனாதிபதி வேட்பாளராக தற்போது மூவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. பிரதமர் பஞ்சதர்மக் கொள்கையை ஏற்றுக்கொள்வாராயின் தங்கள் கட்சியிலிருந்து பிறிதொரு வேட்பாளரை நிறுத்தாமல் விடுவோம்.

அதுமட்டுமன்றி மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதித்தேர்தலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா – ரொரன்ரோவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(ரொரன்ரோ)

கனடா ரொரன்ரோவில் சனிக்கிழமை இரவு 11.50 மணியளவில் உமாதேவன் தியாகராஜா (வயது 26) என்ற தமிழ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ரொரன்ரோ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வோடன் - பிஞ்ச் சந்திப்பில் உள்ள கடைத்தொகுதியின் வாகனத் தரிப்பிடத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதையடுத்து தாம் அங்கு சென்றபோது உமாதேவன் தியாகராஜாவின் சடலம் துப்பாக்கிச் சூடுகள் பட்ட நிலையில் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவரைச் சுட்டுக்கொன்றவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனவும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## மக்கள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் விநாயகபுரம் முதலாம் பிரிவு மக்கள் திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவின் முன்பாக நேற்றுஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிரதேச செயலருக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமது பகுதி சுனாமியால் பாதிக்கப்படவில்லை என பிரகடனப்படுத்தியது தவறு எனவும் தமக்குரிய கொடுப்பனவுகள் இதனால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய–இலங்கை நிபுணர்கள் “சேது” திட்டம் குறித்து பேச்சு

(புதுடில்லி)

சேது சமுத்திரத் திட்டம் காரணமாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆராயும் முகமாக இந்திய, இலங்கை நிபுணர்கள் நேற்று முதல் புதுடில்லியில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சேது சமுத்திரத்திட்டம் அமுல்படுத்தப்படுவதன் மூலம் இலங்கையின் மேற்கு மற்றும் வடக்கு பிராந்தியத்தின் சுற்றாடல்கள் பாதிக்கப்படலாம் என்பதுடன், கொழும்புத்துறைமுகத்திற்கான கப்பல் நடவடிக்கைகளுக்கும் குந்தகம் ஏற்படலாம் என இலங்கையைச் சேர்ந்த பல அமைப்புக்கள் முன்னர் விசனம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

### - மதமாற்றத்தடைச்சட்டம் -

## அமெரிக்கா அதிருப்தி தெரிவிப்பு; உதவி வெட்டப்படும் என எச்சரிக்கை

சிறிலங்கா அரசாங்கத்தின் மதமாற்றத் தடைச்சட்ட மூலம் தொடர்பாக அமெரிக்கா தன்னுடைய அதிருப்தியை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்தச் சட்டமூலம் நடை முறைப்படுத்தப்படுமானால் சிறிலங்காவிற்கான அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவிகள், மற்றும் வணிகத் தொடர்புகள் என்பன நிறுத்தப்படும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக்கவைச் சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினாறொக்கா, முன்மொழியப்பட்ட இந்த யோசனை சட்டமூலம் ஆக்கப்படமாட்டாதென முன்னதாக இலங்கை அரசாங்கம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெ.ப்ரி லன்ஸ்ட்டிடமும், அமெரிக்க நிர்வாகத்திடமும் அளித்த வாக்குறுதியை நினைவுபடுத்தியுள்ளதுடன் மேற்படி எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்.

மத சுதந்திரத்துக்கான இந்தச் சட்டமூலம் தொடர்பான யோசனைகள் புத்த சாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் அமைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் மதில் சுவர் இடிந்து வீழ்ந்து ஒன்றரை வயது சிறுமி பரிதாப மரணம்



(அலுவலக செய்தியாளர்)

மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இடிபாட்டிற்குள் சிக்கி ஒன்றரை வயதுச் சிறுமி பலியானார்.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.45 மணியளவில் பரவிப்பாஞ்சான் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுள்ளது.

உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற 21ஆவது மெய்வல்லுனர் போட்டியினை பெற்றோருடன் சென்று பார்த்துவிட்டு வீடு திரும்புகையில் மைதானத்தினைச் சுற்றி அமைக்கப்பெற்று வரும் புதிய மதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கடை விற்பனைக்கு

கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கும், கச்சேரிக்குமிடையில் கிணறு, மலசல கூட வசதியுடன் கடை விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- வன்னியன பல்பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக (பிரபா) கிளிநொச்சி. T.P.021.2285776. (6506)

### தவறிவிட்டது

கந்தையா மாரிமுத்து இல.95, திருநகர் எனும் முகவரியைக் கொண்டவரது குடும்ப பதிவு அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (6511)

### தவறிவிட்டது

செல்லத்துரை யோகலிங்கம் என்பவரது அடையாள அட்டையும். ஒரு தொகைப் பணமும் புதுக்குடியிருப்புக்கும் உடையார் கட்டுக்கும் இடையில் பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்துவர்கள் மாங்குளம் அரசியல் துறையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (6510)

### விற்பனைக்கு உண்டு

முத்துஐயன்கட்டு வலது கரை இரண்டாம் கண்டத்திலுள்ள 21ஆம் 22ஆம் இலக்க வயல்காணியும் குடியிருப்புக்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு க. நடராசா பத்தர், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (5387)

# ஆசிரியர்கள், திட்டமிடல் நிதி உதவியாளர்கள் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் 1864 தமிழ்மொழி மூலப்பட்டதாரிகள் மற்றும் 504 சிங்கள மொழிமூலப் பட்டதாரிகளை ஆசிரியர்களாகவும், 629 தமிழ் மொழி மூலப்பட்டதாரிகள் மற்றும் 98 சிங்கள மொழிமூலப்பட்டதாரிகளை திட்டமிடல் நிதிஉதவியாளர்களாகவும் நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா தெற்கு, கல்முனை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் உள்ள வலையக் கல்விப் பணிமனைகளில் நடைபெறவிருகின்றன என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைக்கு மொத்தமாக 4964 தமிழ்மொழி மூலபட்டதாரிகளும், 349 சிங்கள மொழிமூலப்பட்டதாரிகளும் தோற்றவிருக்கின்றனர்.

நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அழைப்புக்கடிதங்கள் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்தினால், அந்தந்த வலயக்கல்விப்பணிமனைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து விண்ணப்பித்தோர் அவ்வவ் மாவட்டத்தில் குறிப்பிடப்பட்ட வலயக்கல்விப் பணிமனைக்கு நேரில் சென்று நேர்முகத் தேர்வுக்கான கடிதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சை நடத்தப்படும் வலயக்கல்வி அலுவலகம், நேர்முகப் பரீட்சை நடக்கும் திகதி ஆகியன வருமாறு:-

**யாழ்.மாவட்டம:** யாழ். வயக் கல்வி அலுவலகம். நேர்முகப் பரீட்சை நடக் கும் திகதி:- ஓகஸ்ட் 5,6,7,8,9,10. தோற்றும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை: 2416.

**கிளிநொச்சி மாவட்டம்:** கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை. நேர்முகப் பரீட்சை ஓகஸ்ட் 4,5. தோற்றுவோர் எண்ணிக்கை- 238,

**வவுனியா மாவட்டம:** வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிமனை. நேர்முகப்பரீட்சை- ஓகஸ்ட் 06. தோற்றுவோர் எண்ணிக்கை-153.

**மன்னார் மாவட்டம்:** மன்னார் வலயக்கல்வி அலுவலகம். நேர்முகப் பரீட்சை-ஓகஸ்ட் 07. தோற்றுவோர் எண்ணிக்கை - 115.

**மட்டக்களப்பு மாவட்டம்:** கல்முனை வலயக் கல்விப் பணிமனை. நேர்முகப் பரீட்சை - ஓகஸ்ட் 4,5,6,7. தோற்றுவோர் எண்ணிக்கை - 872.

**கல்முனை:** கல்முனை வலயக் கல்விப்பணிமனை. நேர்முகப் பரீட்சை- ஓகஸ்ட் 4,5,6. தோற்றுவோர் எண்ணிக்கை - 590.

**திருகோணமலை மாவட்டம்:** திருமலை-மாகாணக்கல்வி அமைச்சு. நேர்முகப் பரீட்சை- ஓகஸ்ட் 9,10. தோற்றுவோர் எண்ணிக்கை - 215.

நேர்முகத் தேர்வுக்கு தோற்றும் பட்டதாரிகள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் (பெயரில் மாற்றமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட வேண்டும்), பட்டச் சான்றிதழ், பட்டப் படிப்பிற்குரிய பாடங்களுடன் வகுப்புச்சித்திபெற்ற விபரங்களைக் கொண்ட ஏற்புடைய சான்றிதழ், விண்ணப்பித்த பாடத் துறைகளுக்கு ஏற்புடைய தகைமைகளைக் கொண்ட மேலதிக சான்றிதழ்கள், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (வ-கி மாகாணம் தவிர்ந்த வேறு மாகாணங்களில் வசிப்போர் தமது வதிவிடம் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்) இவ்வாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (25)

# பலத்த மழையுடன் கூடிய காலநிலை இலங்கையில் ஏற்படாதாம்

இந்தியாவின் மேற்கு மாநிலங்களில் ஏற்பட்டது போன்ற பலத்த மழையுடன் கூடிய காலநிலை இலங்கையிலும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லையென சிறிலங்கா வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் பருவமழை காரணமாக இதுவரை 900இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தென்மேல் பருவப்பெயர்ச்சியின் முழுமையான தாக்கத்திற்கு இந்தியா முகம் கொடுத்துள்ள போதிலும் இலங்கையில் பலத்த காற்று வீசுவதுடன், சில வேளைகளில் மழை பெய்யக்கூடும் என சிறிலங்கா வளிமண்டலவியல் திணைக்கள பிரதி இயக்குனர் எஸ்.எச்.காரியவசம் தெரிவித்துள்ளார்.

மத்திய மலைப் பிரதேசத்தில் பலத்த காற்று வீசுமென்றும், மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அடுத்த வாரம் வரை மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கிறது.

வடமேல் மாகாணத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும், அடுத்த சில வாரங்களில் பருவநிலை மாற்றங்கள் மோசமடையக்கூடுமாகையால் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


பலத்த காற்றுக் காரணமாக பல வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் சேதமேற்பட்டுள்ளன.

இங்கினியாகலவில் 20 வீடுகளும், மீஹிரிகமவில் ஏழு வீடுகளும், இரத்மலானையில் ஐந்து வீடுகளும் சேதமடைந்துள்ளன.

# காசநோய்,தொய்வு நோய் சிகிச்சைக்கு சமுகமளிக்குக

மார்பு நோய் சிகிச்சைப் பிரிவினால் காசநோய், தொய்வு நோய்க்கான சிகிச்சை மாதா மாதம் முதலாம், மூன்றாம் புதன் கிழமைகளில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சிகிச்சா நிலையத்தில் நடைபெறும்.

எனவே நீண்ட நாள் இருமல், முட்டு வருத்தமுடையவர்களும், தொடர் சிகிச்சை பெறுபவர்களும் இத்தினங்களில் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி சுகாதார வைத்தியஅதிகாரி தெரிவித்துள்ளார்.





வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவனகட்டடத்திறப்பு விழாவின் போது பிரதேசசபையின் உப அலுவலக பெயர்ப்பலகையினை செம்பியன்பற்று பிரதேசசபை பொறுப்பதிகாரி பொ.தங்கராசா திரைநீக்கம் செய்வதையும், கேட்போர் கூடத்தினை நிதித்துறையை சேர்ந்த கி.தாயகன் நாடாவை வெட்டித்திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (லோ,தீ)

# உடையார்கட்டுப் பிரதேசத்தில் தேசியஎழுச்சி பேரவை சங்கமம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சி பேரவையினருக்கான சங்கம நிகழ்வு பிரதேச தேசிய எழுச்சி பேரவைச் செயலர் க.விஜயகுமார் தலைமையில் நேற்று முன்தினம் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்விற்கான பொதுச்சுடரினை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

நிகழ்விற்கான கருத்துரைகளை பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கிராம அலுவலர் சுந்தரலிங்கம், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன், உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா ஆகியோர் வழங்கினர். சிறப்பு சமகால அரசியல் கருத்துரையை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி வழங்கினார். பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர்கள், உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர், போராளிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (19)

## சிவபூமிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிகழ்வுகள்

கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள சிவபூமிப் பாட சாலையின் முதலாம் ஆண்டு நிகழ்வுகள் நேற்றுபிற்பகல் 3.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம் பெற்றது.

பிரதம விருந்தினராக லண்டன் நகரில் இருந்து வருகை தந்த கணக்காளர் சூரிப்பிள்ளை பாலசிங்கம் தம்பதிகளும் லண்டன் நகரில் இருந்து வருகை தந்த ம.ஜெயசீலன் தம்பதிகளும் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. .சு. தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கண்டெடுப்பு

சேதுப்பிள்ளை ஜெகநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (851113355V), நிரந்தர பயண அட்டையும் (036681நி) கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி பேருந்து நிலைய நேரக் கணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

# இராணுவச்சிப்பாய்மீது சித்திரவதை; மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு


யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி வரும் இரணுவச்சிப்பாயான தனது கணவரை படை அதிகாரிகள் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதாக அவரது மனைவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்தில் புகார் செய்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 52-2 படைப்பிரிவில் கோப்ரல் தரத்தில் கடமையாற்றிவரும் பிரியந்த விஜயவீர எனும் இராணுவச் சிப்பாய் தொடர்பாகவே அவரது மனைவியால் இம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்முறைப்பாட்டில் கடந்தயூன் 18ஆம் திகதியன்று மீசாலைப் பகுதியிலுள்ள முகாமில் வைத்திருந்த தனது கணவரை விசாரணைக்கென இராணுவப்பொலிசார் அழைத்துச் சென்றதாகவும், அங்கு காயம் விளைவிக்கும் வகையில் சித்திரைவதைக்கு அவரை உள்ளாக்கியதாகவும், இது தொடர்பாக அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இம் முறைப்பாட்டை தான் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தனது கணவர் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளத்தாகத் தெரிவித்த குறித்த பெண்ணினால் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு தலைமையகம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதையடுத்து குறித்த படைச் சிப்பாய் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் முகாமின் இராணுவ பொலிஸ் பிரிவின் அதிகாரியை விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் பணித்துள்ளது. (27,33)



நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரனிடம் ஈ.சீ.ஜீ இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## இரண்டு மாதங்களில் 300 பேர் கொலை புருண்டியில் கெரில்லாக்கள் கைவரிசை


புருண்டியிலுள்ள கெரில்லாக்குழுவினர் கடந்த இரண்டு மாதங்களில் 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொன்றுள்ளனர் என்று தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கூட்டு இனக் கிளர்ச்சிவாதிகள் கடந்த மாதம் 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்களை கொன்றுள்ளதாக புருண்டியின் இராணுவம் தெரிவித்துள்ளது.

300 பேர் கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்ட வானொலி நிலையம் கெரில்லாக்களின் வசமுள்ள குஜம்பூராவின் மேற்குப்பகுதியிலும் புவன்சா மாகாணத்தின் மேற்குப்பகுதியிலும் மூன்று பாரிய சடலங்கள் புதைக்கப்பட்டுள்ள கல்லறைகளைக் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையான மக்களைக் கொன்றுள்ளதாகவும் அவர்களில் அனேகமானவர்கள் தமது எதிரிகள் எனவும் தெரிவித்துள்ள கெரில்லாக்கள் தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இராணுவம் அதிகமான பொதுமக்களை கொன்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

புருண்டி அரசாங்கத்துடன் சண்டையிட்டுவரும் ஒரே ஒரு கெரில்லாக்குழு கூட்டுஇனக்கெரில்லாக்குழு என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக்குழுவினரை சமாதான முயற்சிகளில் இணையச் செய்யாவிட்டால் அப்பகுதியில் நிரந்தர சமாதானம் ஏற்படாது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



சவுதி அரேபியாவிலிருந்து அமெரிக்காவுக்கு சென்று 1945 இல் நோய்வாய்ப்பட்டிருந்து நேற்றுக்காலை மரணமான. பாஹ்ட் மன்னனும், அவருக்காக முடிசூடிய இளவரசர் அப்துல்லா பின் அப்டல் அசிஸும் (இடதுபுறம்) இப்படம் 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது.

## ஈராக்கில் 7பேர் பலி

ஈராக்கில் பாக்தாத் அருகே உள்ள ஹஸ்லாநகரில் பொலிஸ் சோதனைச்சாவடி அருகே குண்டுகள் ஏற்றப்பட்ட கார் வெடித்துச்சிதறியதில் ஏழு பேர் பலியானார்கள்; 12பேர் காயமடைந்தனர்.

பலியான அனைவரும் அப்பாவி ஈராக்கியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆறு நாடுகள் பேச்சுவார்த்தை கூட்டுப் பிரகடனம் வெளியிட முடிவு

வடகொரியா அணுசக்தி விவகாரத்திற்கு தீர்வுகாணும் வகையில் பீஜிங்கில் நடைபெறும் ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சுக்களின் முடிவில் கூட்டுப்பிரகடனம் ஒன்றை வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென கடந்த வார இறுதியில் ஆறு நாடுகளின் பிரதிநிதிகளும் முக்கிய கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

ஜப்பானிய பிரதிநிதி ஒருவர் கருத்துவெளியிடுகையில்; பேச்சுவார்த்தைகள் வெளிப்படையாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைந்திருந்ததாகக் கூறினார்.

அதேசமயம் ஆறு நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் தீவிரகருத்து மோதல்கள் இடம்பெற்றதையும் அவர் மறுக்கவில்லை. அமெரிக்க பிரதமரின் சமரசப் பேச்சாளர் தகவல் தருகையில், வார இறுதி நாட்களில் இடம்பெற்ற கலந்துரையாடல் நீண்டதாகவும், கஷ்ரமானதாகவும் இருந்ததாகக் குறிப்பிட்டார்.

வடகொரியாவிலுள்ள அணுசக்தி நிலையங்களை மூடிவிடுவது தொடர்பாகவும், அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் உதவிகளும், பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று ஏழாவது நாளாக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் சமயம் சீனாவினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல்பிரகடனம் சம்பந்தமாக ஆறு நாடுகளும் ஒரு முடிவுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாகிஸ்தானுக்கு போர் விமானங்கள் சனாதிபதி புஷ் அனுமதி வழங்கினார்



(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானுக்கு முதல் கட்டமாக 'எப் 16' ரக இரண்டு போர் விமானங்களை விற்பதற்கு அமெரிக்க சனாதிபதி புஷ் அனுமதி அளித்துள்ளார்.**

பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரித்ததைத் தொடர்ந்து அந்த நாட்டுக்குப் போர் விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது. 15 ஆண்டு காலம் இந்தத் தடை அமுலில் இருந்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் தோழமை நாடாக பாகிஸ்தான் மாறிய பின் இந்தத் தடை இரத்தானது.


அந்த நாட்டுக்குப் போர் விமானங்களை விற்பது என்று கடந்த மார்ச் மாதம் அறிவிக்கப்பட்டது. இதற்கு இந்தியாவும், இந்திய ஆதரவு அமெரிக்க எம்.பி.க்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கா சென்று அமைதிப்பணிக்கான அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அத்தோடு இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் கையெழுத்திட்டன.

இது நடந்து இரண்டு வாரத்தில் பாகிஸ்தானுக்கு எப்-16 ரக இரண்டு போர் விமானங்களை விற்பதற்கு புஷ் அனுமதி அளித்துள்ளார். அமெரிக்க விமானப்படையில் உள்ள பழைய ஆனால் புதுப்பிக்கப்பட்ட இரண்டு போர் விமானங்கள் இப்போதைக்கு பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன. பெரிய அளவிலான புதிய சூப்பர்சொனிக் போர் விமானங்களை விற்பது தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நேற்றுக்காலை பாக்தாத்தில் அல் பலடியாட் என்ற இடத்தில் சோதனை நடவடிக்கையின்போது குண்டு வெடித்ததில் சேதமுற்ற தனது கடையை துப்புரவு செய்யும் பணியில் ஒருவர் ஈடுபடுகிறார்.



கடந்த 28ஆம் திகதி மீண்டும் விண்வெளியை நோக்கிச் செல்ல முன்பு நாசா சர்வதேச விண்வெளிமையத்தில் நிலைகொண்டிருந்த சட்டலைட் டிஸ்கவரியின் தோற்றம்

## இருகொரியாக்களுக்கும் இடையில் ரயில்-வீதிப்போக்குவரத்து ஆரம்பம்

(சியோல்)

வடகொரியா-தென்கொரியா இடையே ஒக்ரோபர் முதல் ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா-தென்கொரியா இடையே ஒத்துழைப்பை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேற்கு கடல் பகுதியை இருநாட்டு மீனவர்களும் பயன்படுத்த சமீபத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இரு நாடுகள் இடையே ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்து ஒக்ரோபர் முதல் தொடங்கப்படவுள்ளது.

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்களை கைவிட வைப்பது தொடர்பாக ஆறு நாடுகள் இடையே சீனத் தலைநகர் பீஜிங்கில் பேச்சு நடக்கிறது. வடகொரியா, தென்கொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இப்பேச்சில் ஈடுபட்டுள்ளன. இந்தப் பேச்சின் ஒரு அம்சமாக ரயில் மற்றும் வீதிப்போக்குவரத்துத் தொடங்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

## தொலைக்காட்சி பார்ப்பது பாவச்செயல் பாகிஸ்தானில் தொலைக்காட்சிகள் தீவைப்பு

தொலைக்காட்சி பார்ப்பது பாவச்செயல் என்று மதகுருமார்கள் கூறியதால் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு தீவைத்துள்ளனர்.

ஆப்கானின் எல்லைப்புறத்தில் வசிக்கும் பழங்குடி மக்கள் தொலைக்காட்சி பார்ப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்து தெரிவிக்கும்படி மதகுரு அப்துல் லாஷாவிடம் கேட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து வானொலியில் பேசிய அவர் தொலைக்காட்சி பார்ப்பது பாவச்செயல் ஆபாசத்துக்கு எதிராக புனிதப் போர் நடத்துங்கள் என்று அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை சார்சடா நகரில் உள்ள பூங்காவில் தொழுகை நடத்துவதற்காக முஸ்லிம்கள் கூடினர். தொழுகை முடிந்ததும் வீடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட 25 தொலைக்காட்சிப் பெட்டிகள் அங்கு குவிக்கப்பட்டு அவற்றின் மீது பெற்றோலை ஊற்றி தீவைத்தனர்.

அப்போது அங்கு கூடி இருந்தவர்கள் "கடவுள் மிகப் பெரியவன்" என்று குரல் எழுப்பினர்.



முன்னைய சம்பவங்களில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டபோதும் லண்டனில் மேலும் குண்டுகள் வெடிக்கலாம் என்று மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ள நிலையில் நொட்டிங்ஹில் என்ற இடத்தில் காவல் கடமையிலிருக்கும் லண்டன் பொலிசார்.

## கட்சிக்கு கட்டுப்பட்டு நடவுங்கள் இராணுவத்துக்கு சீன தளபதி உத்தரவு

(பீஜிங்)

"எல்லா நேரத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இராணுவத் தளபதிகள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்று சீன அதிபர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் கம்யூனிஸ்ட் தலைவரான ஜியாங் ஜெமினிடமிருந்து சனாதிபதி தளபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் இராணுவ மூத்த தலைவர்கள் மத்தியில் ஜியாங் ஜெமினுக்கு இன்னும் செல்வாக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

சீன இராணுவத்தில் 25இலட்சம் வீரர்கள் உள்ளனர். இவர்களில் இரண்டு இலட்சம் பேரை இந்த ஆண்டு இறுதியில் குறைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

## ஆப்கானில் உலங்குவானூர்தி வீழ்ந்து நொருங்கியது

ஆப்கானிலில் பயிற்சியின் போது அமெரிக்க உலங்குவானூர்தி திடீரென்று விழுந்து நொருங்கியதில் விமானிகள் இரண்டு பேர் இலேசான காயங்களுக்குள்ளாகினர்.

இந்த உலங்குவானூர்தியை தாங்களே சுட்டுவீழ்த்தியதாக தலிபான் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அதை அமெரிக்க இராணுவம் மறுத்துள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறியுள்ளது. இது வரையில் அங்குஅமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான இரண்டு உலங்குவானூர்திகள் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன.

# கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் மாணவர் கலைத்திறன் போட்டிகள்

-திருக்குறள் மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் கிளி.கரைச்சிக்கோட்ட பள்ளி மாணவர்களுக்கான கலைத்திறன் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. திருக்குறள் மாநாட்டை முன்னிட்டு இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.**

நாவன்மைப்போட்டிகளும் மற்றும் குறளிசை நாடகம், சங்கத் தமிழ் பாடலிசை,நாட்டுப்புறக்கலை, விநாடி வினாப்போட்டி என்பவற்றை நடாத்த தமிழ்ச்சங்கம் திட்டமிட்டுள்ளது. இப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள தென தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இப்போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களை அனுப்பி வைக்கு மாறும் பள்ளிமுதல்வர்களை கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(முல்லை)

செம்மலை, செம்மலை கிழக்கு (நாயாறு) கிராம மக்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு அண்மையில் செம்மலை தற்காலிக குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வுத் திட்டத்தில் சீற்ட் நிறுவனத்தாலேயே இந்த துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

செம்மலை கிராமத்தில் 296 குடும்பங்களுக்கும், செம்மலை கிழக்கு (நாயாறு) கிராமத்தில் 64 குடும்பங்களுக்குமாக மொத்தம் 360 துவிச் சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர்கள் கடற்புலிகளின் அரசியல் துறைப் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன், கிராமத் தலைவர்கள், சீற்ட் நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

# பிரதேச அலுவலகம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த திட்ட ஆரம்பப் பிர தேசமான கீரிசுட்டானில் அண்மையில் பிரதேச அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான நிதிப்பங்களிப்பினை டென்மார்க் அகதிகள் பேரவை (DRC) வழங்கியுள்ளது.

போரினாலும், சமூகப்பொருளா தாரக் காரணிகளாலும் பின் தங்கி யுள்ள கிராமங்களை மேம்படுத்தும் நோக்கோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையிலேயே கீரிசுட்டானிலும் இவ் அலுவலகம் இப் பிரதேச மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கோடு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அணித் தலைவர் செந்தூரன், தொ ழில்நுட்ப உத்தியோகத்தர் மூர்த்தி, திட்ட இணைப்பாளர் த.தயானந்தன், வவுனியா வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் இந்திரன், [illegible] ,வவுனியா மாவட்ட நெடுங் கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் விஜயகுமார் உட்பட போராளிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப் பித்தனர். (சோ)

# சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் நமணங்குளம் கிராமத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியு தவியுடன் நிகொட் சமுதாய அபி விருத்தித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நமணங்குள கிராமத்தில் நடை முறைப்படுத்தப்படுகின்ற திட்டங் களில் வருமான அதிகரிப்பு சுய தொழிலை மேற்கொள்வதற்காக 42 பயனாளிகளுக்கு நான்கு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிராம அபி விருத்திக் சங்க மண்டபத்தில் நம ணங்குளம் சமூக பொருளாதார அபி விருத்திசங்கப் பொருளாளர் பொறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட மாவட்ட இணைப்பாளர் சு.பரமானந்தன் ஆகியோர் ஏற்றி வைத்து கருத்துரை களையும் வழங்கினர். இதில் நாற் பத்திஇரண்டு பயனாளிகளுக்கு கடன் களையும் வழங்கினர்.

சிறுவியாபாரம் ஐந்து பேருக்கு மொத்தம் 50000,ரூபாவும் கோழி வளர்ப்பு ஐந்து பேருக்கு மொத்தம் 50000 ரூபாவும் மாடுவளர்ப்பு நான்கு பேருக்கு மொத்தம் 40000 ரூபாவும் ஆடுவளர்ப்பு மூன்றுபேருக்கு மொத்தம் 30000 ரூபாவும் தோட்டச் செய்கை பத்துப் பேருக்கு மொத்தம் , 100000, ரூபா நெற்செய்கை 15 பேருக்கு மொத்தம் 150000 ரூபாவும் மொத்தம் 42 பயனாளிகளுக்குநான்கு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கிய நிகழ்வில் கிராம அபி விருத்திச் சங்க பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண டனர். (24)

# விஞ்ஞான ஆய்வு கூட கட்டட திறப்பு விழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாட சாலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி யுதவியுடன் 14.5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக் கப்பட்டவிஞ்ஞானஆய்வுகூட கட்டடத் திறப்பு [illegible] கடந்த வெள்ளியன்று காலை 1[illegible] மணிக்கு பாடசாலை முதல்வர் ச.பாலகிருஷ்ணன் தலை மையில் இடம்பெற்றது.

மங்கலவிளக்கினை மாயவனூர் சிவன் ஆலயகுருக்கள், வட்டக்கச்சி மகாவித்தியாலய முதல்வர் ச.சந்தி ரராஜா ஆகியோர் ஏற்ற தேசியக் கொடியினை வித்தியாலய முதல்வர் சி.பாலகிருஷ்ணனும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆய்வுகூடக் கட்டடத்தினை கிளிநொச்சி வலய விஞ்ஞான பாடஉதவிக்கல்விப் பணிப்பாளர் மு.ரவீந்திரன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். வட்டக் கச்சி மகாவித்தியாலய முதல்வர் சந்திரராஜா கூறுகையில், இவ் ஆய்வு கூடம் மாணவர்களுடைய அடைவு மட்டத்தை உயர்த்தக் கூடிய வகை யில் உள்ளது எனக் கூறினார் இந் நிகழ்விற்கு பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற் றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (12)

# சமகால அரசியல் கருத்தூட்டலும் வீட்டுத் தரிசிப்பு நிகழ்வும்

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தின் ஆண் டான்குளம் பகுதியில் இன்றைய அரசியல் தொடர்பான சமகால கருத்தூட்டல் நிகழ்வும் வீட்டுத் தரி சிப்பு நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ் வுகள் மன்னார் மாவட்ட தமிழீழ [illegible] நிர்வாக சேவையினரின் ஏற் பாட்டில் ம/ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்க அ.த.க வித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தமிழீழ [illegible] நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் தலை மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் பெருமளவா னோர் கலந்து கொண்டு சிறப்பித் தனர். அத்துடன் மன்னார் மாவட்டத் தின் கிராமங்களான அடம்பன், ஆண் டான் குளம்,பாப்பாமோட்டை, பள்ள மடு கள்ளியடி, கூறாய் ஆத்தி மோட்டை, இலுப்பை கடவை, வெள்ளாங்குளம் ஆகிய பின் தங்கிய கிராமங்களுக்குச் சென்ற மேற்படி பிரதிநிதிகள் இன்றைய அரசின் நிலை தொடர்பான கருத்தூட்டல் களையும், வீட்டுத் தரிசிப்புக்களையும் மேற்கொண்டனர். இதனால் மேற்படி கிராம மக்கள்விழிப்புணர்வு அடைந்து வருகின்றனர். இவ் வீட்டுத் தரிசிப்பு நிகழ்வுகள் இரண்டு நாட்கள் நடை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (24)

# முன்பள்ளிக்கு அடிக்கல் நாட்டல்

(முல்லை)

சுனாமிக்கு பின்னரான புனர மைப்புத் திட்டத்தின் கீழ் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினால் செம்மலைக் கிராமத்தில் முன்பள்ளிக்கான அடிக் கல் நாட்டல் அண்மையில் இடம் பெற்றது.

செம்மலை கிராமஅலுவலர் புஸ் பராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை பிரான்ஸ் உதயம் அசோசியஸ் நிறு வனப்பிரதிநிதியான மரியநாயகம் திருமதி ம.மொனிக்கா, கிராம அபி விருத்தி சங்கத்தலைவர் இராம லிங்கம் ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழத்தேசியக்கொடியினை தமிழீழ தேசியத்தொலைக்காட்சிசேவை செய்தியாளர் அருணா ஏற்றினார். தமிழர்புனர்வாழ்வுக்கழகக் கொடி யினை முல்லைமாவட்ட த.பு.க பொறுப்பாளர் மூர்த்தி ஏற்றினார்.

இந்தத் திட்டத்திற்கான பெயர்ப் பலகையினை உதயம் நிறுவனப் பிரதிநிதி மரியநாயகம் திரைநீக்கம் செய்தார். தொடர்ந்து அடிக்கல்லினை மரியநாயகம், மொனிக்கா, பிள்ளைகள், த.பு.க மாவட்டப் பொறுப் பாளர் மூர்த்தி, கிராமத் தலைவர் இராமலிங்கம் ஆகியோர் நாட்டி னார்கள். தொடர்ந்து கருத்துக்கள் இடம்பெற்றன. (20)

## விண்ணப்பிக்கவும்

கிளி / புனிதசென்திரேசா பெண்கள் கல்லூரியில் 2006 ஆம் ஆண்டில் தரம் 1 இல் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் அனுமதிக் குரிய விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி எதிர்வரும் வியாழக் கிழமைக்கு முன்ன் காரியாலயத்தில் ஒப்படைக் குமாறு அக்கல்லூரியின் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வருடாந்த மஹோற்சவம்

(அலுவலகசெய்தியாளர்)

ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ திருவிழா கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி தற்போது நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதியன்று தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 8ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

மேற்படி ஆலயமானது சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போது சிறிலங்கா இராணுவத்தினரின் வான் மற்றும் எறிகணைத்தாக்குதல் காரணமாக முற்றாக சேதமாக் கப்பட்டு தற்போது பொதுமக்கள் மற்றும் வெளிநாடுகளில் வதியும் நலன் விரும்பிகளின் உதவியுடன் மீண்டும் புதிதாக கட்டப்பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# கழிவு மீன்கள் வீசப்படுவதால் சுற்றாடலுக்கு ஆபத்து!

(மல்லாவி)

மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட விடத்தல்தீவு கடற்கரை துறைமுகப்பகுதிகளில் அங்குள்ள மீனவர்களினால் கழிவு மீன்கள் கொட்டப்பட்டு வருவதால் துர்நாற்றம் வீசி வருகின்றது.

இதன் போது மீனவர்களினால் கடலில் பிடிக்கப்படும் மீன்களை விற்பனை செய்து விட்டு மிகுதி மீன்களை கருவாட்டுக்கு பயன் படுத்திவிட்டு கழிவு மீன்களையும், கழிவு நண்டுகளையும்கடல் நீரேரியில் கொட்டி வருவதால் இவை சுகாதார சீர்கேட்டை விளைவிப்பதாகவுள்ளது. இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவ னத்தில் எடுக்க வேண்டுமென இப் பகுதி மக்கள் கேட்கின்றனர்.

(24)

# காட்டு யானைகள் தொல்லை

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் தேத்தாவடி கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லைகளால் இங்கு வாழும் 22 குடும்பங்கள் பயப் பீதியுடன் இருந்து வருகின்றனர்.

மேற்படி கிராமத்தில் மூன்று மாதத்திற்கு முன்பு காட்டு யானை ஒன்று தாக்கியதில் இங்கு வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் உயிர் இழந்தார்.

காட்டு யானைகள் பகல் வேளைகளில் மக்களின் வாழ்விடங் களுக்குச் சென்று நெல் மூட்டை களைப் பிரித்து நெல்லை உண்டு மக்களைப் பீதி யடையச் செய்யும் விதத்தில் அட்டகாசம் புரிந்து வரு கின்றது. அதனால் இவ் யானை தொல்லையிலிருந்து தங்களைக் காக்கவேண்டுமெனக் கோரப் பட்டுள்ளது. (24)

## கல்வி அலுவலகத்திற்கு கணனி வழங்கல்

உலக உணவுத்திட்டத்தினால் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு கடந்தவாரம் கணனி இயந்திரத்தொகுதி ஒன்று வழங்கப்பட்டது.

இதனால் தமது கோட்டக் கல்வி அலுவலக வேலை இலகுபடுத்தப் பட்டிருப்பதாக கோட்டக்கல்வி அதி காரி தெரிவித்தார். (20)

# கல்விக் கண்காட்சி

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரியில் கல்விக்கண்காட்சி ஒன்று நேற்று இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி [illegible]லி தலைமையில் இடம்பெற்ற [illegible]க்கண்காட்சியில் கண்காட்சி மண்டபத்தினை மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ம.ஆர்பட்ரெவ்வல் திறந்துவைத்தார்.

இதில் ஆண்டுஒன்று முதல் ஆண்டு பதின்மூன்றுவரையான மாண விகளின் கைத்திறனை வெளிப் படுத்தும் பலபொருட்களும் வர்ணகாட்சி களும் வைக்கப்பட்டன. (18)

# இடம்பெயர்ந்த மக்களின் கால்நடைகள் உயர்பாதுகாப்பு வலயங்களுள் அழிப்பு!

-சமூகவிரோத செயல்களுக்கு படையினர் துணை!

(தென்மராட்சி)

**எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களின் பல்லாயிரக் கணக்கான கால்நடைகள் சமூகவிரோதிகளால் இறைச்சியாக்கப் படுகின்றன.**

எழுதுமட்டுவாள், மருதங்குளம் ஓட்டுவெளி, கரம்பகம் நாகர்கோவில், முகமாலை ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களின் பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் நாள்தோறும் தொடர்ச்சியாக சமூக விரோதிகளால் இறைச்சியாக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்படுவதாக இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நிற்கும் இக்கால்நடைகளை படையினருடைய ஆதரவுடன் சமூக விரோதிகள் பிடித்து இறைச்சியாக்கி வருவதுடன், குறிகளும் வைக்கப்பட்டு வருவதுடன் இறைச்சியாக்கப்படும் கால்நடைகள் உந்துருளியிலும்,மூன்று சக்கர வாகனத்திலும காலை ஐந்து மணியில் இருந்து ஆறு மணிக்கு பிரதானசாலையூடாக கொண்டு செல்லப்படுவதாகவும் பொதுமக்கள் ஆதாரபூர்வமாகத் தெரிவித்துள்ளனர். (28)

# மல்லாகம் நீதிமன்ற புதிய கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு

(வலிமேற்கு)

மல்லாகம் நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கு புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சும், நிதி அமைச்சும் இணைந்து சுமார் ஐந்து கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருக்கின்றன..

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி சம்பந்தப்பட்டவர்களிடம் வழங்கப்பட்ட நிலையில் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

புதிய நீதிமன்றக் கட்டடம் தமிழ்தம் கலாசாரப் பாரம்பரியங்களைச் சித்தரிப்பதாகவே அமைக்கப்படவிருக்கின்றது என கட்டட அமைப்புடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக் கட்டடம் கடந்த யுத்த அனர்த்தத்தினால் அழிக்கப்பட்ட நீதிமன்றம் இருந்த அதே வளாகத்திலேயே அமைக்கப்படவிருக்கின்றது என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைக்கப்படும் புதிய கட்டடத்தில் நீதவான் நீதிமன்று, மாவட்ட நீதிமன்று ஆகியன இயங்கவிருக்கின்றன. (37)

## ஈ.சீ.ஜீ சாதனம் கையளிப்பு

யாழ். மாவட்டத்தின் பின் தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரு வைத்திய சாலையில் உபயோகிப்பதற்காக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் அதன் யாழ்ப்பாண காரியாலயம் ஊடாக ஈ.சீ.ஜீ சாதனத்தை மாகாண பிரதி சுகாதாரப்பணிப்பாளரிடம் கடந்த வெள்ளியன்று கையளித்துள்ளது.

# விளக்கு- ஆசிரியர் நாள் சிறப்பிதழ் தீவகத்தில் நாளை அறிமுக விழா

தீவகக் கல்வி வலயத்தில் யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வ.இராதாகிருஸ்ணன் (பி.க.ப(க.நிர்) தலைமையில் நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு விளக்கு சஞ்சிகை -ஆசிரியர் நாள் சிறப்பிதழ் அறிமுக விழா நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் தீவகக் கல்வி வலய உத்தியோகத்தர்களும், தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்விற்கான வரவேற்புரையை அதிபர் சத்தியபாலனும் தலைமையுரையை வ.இராதாகிருஸ்ணனும், நூல் அறிமுகவுரையை அதிபர் பொ.அருணகிரிநாதனும், வெளியீட்டுரையை சோ.தில்லைநாதனும், மதிப்பீட்டுரையை வே.திருச்சபேசனும் (ஆசிரிய நிலைய முகாமையாளர்), பதிலுரையை சிவனேசனும் (இணை ஆசிரியர் விளக்கு சஞ்சிகை இணைப்பாளர் கல்வி மேம்பாட்டுப் பேரவைதீவகம்) வழங்கவுள்ளனர். மற்றும் முதற்பிரதியை க.அரசரட்ணமும் (கோ.க.அலுவலர்), சிறப்புப் பிரதியை க.பாஸ்கரனும் (கோ.க. அலுலவர்) பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு தீவக கல்வி மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் வே. சிவனேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் எட்டாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி அறிவித்துள்ளார்.

# விவசாய பயிற்சி நிலையம் அமைக்க நிகொட் திட்டத்தின் கீழ் நிதியொதுக்கீடு

(வலி-மேற்கு)

யாழ்.மாவட்டத்தில் இரண்டு புதிய கமநல சேவைகள் நிலையங்களை அமைப்பதற்கும் ஒரு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கும் வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு (நிகொட்) திட்டம் சுமார் 36.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது.

இந்நிதி மூலம் வலிகாமம் சண்டிலிப்பாயில் ஒரு கமநல சேவைகள் நிலையமும், வடமராட்சி கரவெட்டியில் மற்றொரு கமநல சேவைகள் நிலையமுமாக இரு கமநல சேவைகள் நிலையங்களும் ஒரு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

ஒரு கமநலசேவை நிலையத்திற்கு 12 மில்லியன் ரூபாவீதம் இரண்டு கமநல சேவைகள் நிலையங்களுக்கும் 24 மில்லியன் ரூபாவும்,மிகுதிப்பணமாக 12.5 மில்லியன் ரூபா மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்திற்கும் என்றவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிக விரைவில் இந்நிலையங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நிதி யாழ்.மாவட்ட கமநலசேவைகள் அபிவிருத்தித்திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது. (37)

## ஆழிப்பேரலை இடிபாடுகளை அகற்ற ஐ.நா.அபிவிருத்தி மையம் உதவி

(வலி-மேற்கு)

ஆழிப்பேரலைத் தாக்கத்துக்கு இலக்கான வட- கிழக்கின் ஆறு மாவட்டங்களில் கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையம் உதவ முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய ஆறு மாவட்டங்களிலுமுள்ள கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு மேற்படி மையம் உதவ முன்வந்துள்ளது.

இதற்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்திமையம் ஒதுக்கியிருந்த நிதி சம்பந்தப்பட்டவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இடிபாடுகளை அகற்றும் வேலைகள் மிகத் துரித கதியில் இடம்பெறவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (37)

# கொழும்புத் துறையில் கொள்ளையரைப் பிடிக்க சமூக நலன் விரும்பும் இளைஞர்கள் முயற்சி

கொழும்புத்துறைப் பகுதியில் தொடர்ச்சியாக தமது கைவரிசையைக் காட்டி வரும் கொள்ளையர் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வழியில்லையா? என்று அப்பகுதியில் வாழும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். வியாழன் நள்ளிரவு வீடு ஒன்றின் ஓடுகளைக் கழற்றி விட்டு உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு தொகைப் பணத்தை எடுத்துச்சென்றிருக்கின்றனர். செல்லும் வழியில் மற்றுமொரு வீட்டு ஜன்னல் கம்பியை வளைத்து உட்புக முற்பட்ட வேளையில் அவ் வீட்டு உரிமையாளர் உசார் நிலையில் இருந்ததை அறிந்து தப்பியோடி விட்டனர் என்றும் தெரி விக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உலாவரும் திருட்டுக் கும்பல் ஒன்று தொடர்ச்சியாகத் திருடு வதாகத் தெரியவரு[illegible]ன்றது. இக்கும்பல் திருடுவதற்கு முன்னர் ஒரு வகை மய[illegible]கமடையச் [illegible]யும் வாயு[illegible] அல்லது மருந்தைப் பாவித்து விட்டு ஜன்[illegible]னல் கம்பிகள் மற்றும் ஓடுக[illegible] போன்றவற்றைக் கழற்றி விட்டு உட்செல்கின்றார்கள் எனச் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்த வகையில், ஏற்கனவே புங்கன்குள வீதியிலுள்ள மூன்று வீடுகளில் புகுந்து [illegible]லட்சக்கணக்கான பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்திரு[illegible]கின்றனர் என்றும் கொழும்புத்துறைப் பகுதியில் ஒரு தொலைத் தொடர்பு நிலையத்துடன் கூடிய வீட்டில் சுமார் 11 இலட்சம் மதிப்பிடும் அளவிற்கு நகைகளையும் சூறையாடியிருக்கின்றனர். இவர்கள் வரும் போது கைகளில் கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களுடன் வருவதால் இவர்களை நெருங்குவதற்கு மக்கள் அஞ்சுகின்றனர். ஒரு தடவை இவர்களைப் பிடிக்க முயன்ற ஒருவரை வாளால் வெட்டிவிட்டு தப்பியோடிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதனையடுத்து இவர்களைப் பிடிக்கும் முயற்சியில் அப்பகுதி சமூக நலனில் அக்கறை கொண்ட இளைஞர்கள் தீவிரமுயற்சி செய்து வருகின்றனர்.(கீ)

# புதிய கணினி வகுப்பு ஆரம்பம்

(வலிமேற்கு)

தென்மராட்சி பிரதேச மக்கள் நலச் சேவைகள் சங்கம் புதிய கணினி வகுப்புக்களை ஆரம்பித்தது.

இக் கணினி வகுப்பு வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடிக் கட்டடத்தில் அமைந்திருக்கும் பிரத்தியேக கணினிக் கூடத்தில் ஆரம்பமாகியது.

இக் கணினி வகுப்பில் இணைந்து கொள்ள இதுவரையில் ஏராளமான மாணவர்கள் பதிவுகளை மேற்கொண்டிருப்பதாக தென்மராட்சி பிரதேச மக்கள் நலசேவைகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (37)

# காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்கு நிரந்தர உதவி அரச அதிபர் தேவை

(வலிமேற்கு)

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்கு நிரந்தர உதவி அரச அதிபர் ஒருவரை நியமிக்கவில்லை என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அப்பகுதி மக்கள் நிரந்தர உ[illegible]வி அ[illegible]ச அதிபரை நியமிப்பதன் மூலம் தமது பகுதியை மிகத் துரித கதியில் அபிவிருத்தி செய்து விட முடியும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டிருந்த காரைநகர்ப் பிரதேசம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் அப்போதைய இந்து கலாசார அமைச்சராக இருந்த தி.மகேஸ்வரனின் முயற்சியால் தனியலகாகப் பிரிக்கப் பட்டது. இருந்தாலும் இன்னமும் நிரந்தரமான உதவி அரச அதிபர் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உதவி அரச அதிபர் பிரிவின் இன்றைய நிலை குறித்துக் கருத்துத் தெரிவித்த ஊர்காவற்றுறை பிரதேச உதவி அரச அதிபரும், காரைநகர் பிரதேச பதில் உதவி அரச அதிபருமான க.சிறிமோகனன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இந்தப் பிரதேசத்தின் பதில் உதவி அரச அதிபராக நான் கடமை புரிந்து வருகின்றேன். எனது மேலதிக நேரக்கடமைக்காக எவ்விதமான கொடுப்பனவுகளோ போக்குவரத்துச் செலவுகளோ வழங்கப்படுவதில்லை. இப் பிரிவு தனியாக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கும் மேலாகின்றது. இருந்தாலு[illegible] [illegible]ரியானதொரு நிர்வாக அலகாக இ[illegible] உதவி அரச அதிபர் பிரிவு இன்னமும் பதிவு செய்யப்படவில்லை.

இப் பிரிவை பதிவு செய்வதற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் பதிவு செய்யப்படாததாலேயே இப் பிரிவுக்கு நிரந்தரமான ஒரு உதவி அரச அதிபர் நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளும் பெரிய அளவில் முன்னெடுக்கப்பட முடியாதிருக்கின்றது எனவும் அவர் கூறினார். (37)

# மண் அகழ்வால் நன்னீர் பகுதிகள் உவர் நீராக மாறும் அபாயம்


-சூழல் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை

யாழ் குடா நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மண் அகழ்வால் நன்னீர் பகுதிகள் அனைத்தும்உவர் நீராக மாறும் அபாயம் தோன்றி இருப்பதுடன் பல பகுதிகளில் நன்னீர் கிணறுகள் உவர் நீராகமாறியுள்ளதாகவும் சூழல் பாதுகாப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

சில குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து ஏற்பட்டமண் அகழ்வால் நில மட்டம் குறைந்துள்ளதுடன் கடல் நீர் கசிவுகள் ஏற்பட்டு இருப்பதாகவும் அரியாலை, கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, கச்சாய் கெற்பலி, பாலாவி, பாலாவி வடக்கு, மிருசுவில், குடமியன், வரணி, மந்துவில் பகுதிகள் அதிக அளவில் பாதிக்கப்படும் சூழல் உருவாகி இருப்பதாகவும் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சட்ட விரோத மண் அகழ்வே இதற்கு காரணம் என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (28)

# மீண்டும் சூடுபிடிக்கும் அயோத்தி விவகாரம்!

இந்தியஅரசியலில் மதத்தின் அடிப்படையிலான சர்ச்சைகள் மீண்டும் தலையெடுத்திருக்கின்றது.13 வருடகாலமாக நீண்ட ஓய்விலிருந்த அயோத்தி தொடர்பான பிரச்சினைகள் மீண்டும் வெளிக்கிளம்பி மக்களிடையே மதக்கலவரங்களை தோற்றுவித்து விடுமோ எனும் அச்சமே இந்தியாவில் தற்போது அவதாரம் எடுத்திருக்கின்றது எனலாம்.



அத்வானி

இதற்குக் காரணம் 1992 தொடக்கம் இதுவரை காலமும் எதுவித இடர்களும் இல்லாமல் இருந்த அயோத்தி தகர்ப்பானது இப்போதோ விஸ்பரூபம் எடுத்திருப்பதுதான்! துரிதகதியில் எதிர்பார்க்க முடியாத சம்பவங்களெல்லாம் நடந்து முடிந்திருக்கின்றன.

அந்தவகையில் பாரதிய ஜனதா கட்சியைச்சேர்ந்தவர்கள் எட்டுப்பேர் மீது அயோத்தி இடிப்பு தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் பதிவாகி இருக்கின்றன. இதனால் பாரதிய ஜனதா கட்சியினருக்கு போதாத காலம் ஆரம்பமோன்றே எதிர்பார்ப்பு எழுந்திருக்கின்றது.

அத்துடன் எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் இந்த வழக்கு விசாரணை தொடருமென்று ரேபரேலி நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

அதனால் தான் அயோத்தி இடிப்பு வழக்கு சூடுபிடிக்கும் என்றே நம்பத் தோன்றுகின்றது.பரபரப்பான உண்மைகள் வெளிவரும் என்றும் (?) குற்றச்சாட்டுக்களை சுமப்பவர்களின் எதிர்கால நிலைமைதான் என்ன.... எனும் சந்தேகமும் முளைவிட்டிருக்கின்றது.

அது மட்டுமன்றி பாரதிய ஜனதா கட்சியினரோ ஆளும் கட்சியிலுள்ளவர்களின் ஊழல் பிரச்சினைகளை ஊதி ஊதி பெரு நெருப்பாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றமை வெளிப்படை.

அதற்காகவேதான் கடந்த மாதம் மக்களவை கூடும்பொழுதெல்லாம் வெளிநடப்பு, கூச்சல், அமளி போன்ற சிக்கல்களை உருவாக்குவதென்ற தீர்மானம் வேறு நிறைவேற்றி இருந்தன என்பதும் தெரிந்ததே!

இவற்றின் இடையேதான் கடந்த ஜீலை ஆறாம் திகதி புதிய திருப்பமாக ரேபரேலி நீதி மன்றம் அயோத்தி வழக்கை விசாரணைக்கு மீண்டும் எடுத்துக் கொண்டது. 16 ஆம் திகதி குற்றம் சாட்டப்பட்ட எட்டுப் பேரும் நீதிமன்ற விசாரணைக்கு வரவேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.



வாஜ்பாய்

அத்துடன் ஜீலை 28 ஆம் திகதி அயோத்தி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எட்டுப் பேர் மீதும் குற்றச்சாட்டுக்களையும் நீதிமன்றம் பதிவு செய்து விட்டது என்பதே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை அயோத்தி இடிக்கப்பட்ட 1992முதல் அத்வானி இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்றமே ஏறியதில்லை. கடந்த ஜீலை 28 இல் தான் முதன் முதலாக நீதிமன்ற வாசலை மிதித்துள்ளார் என்பதே மற்றொரு பரபரப்பான சங்கதி.

இவையனைத்தும் ஆளும் கட்சியின் தில்லு முல்லு விளையாட்டே என்றும் அயோத்தி இடிப்பு தொடர்பாக சான்றுகள் எதுவுமே சி.பி.ஐ.யிடம் இல்லை என்றும் பாரதிய ஜனதா கட்சி ஆளும்கட்சி மீது குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் அயோத்தி இடிப்பு வழக்கிலிருந்து அத்வானி உள்ளிட்டவர்கள் எந்தவிதமான கீறலுமின்றி வெளியே வருவது உறுதியென்று சங்கப் பரிவாரங்கள் மார்பு தட்டுகின்றன. இவற்றினிடையே அயோத்தி தகர்க்கப்பட்டதற்கும் தனக்குமே தொடர்பு இருக்கின்றதாகவும் தன்னிடம் மட்டும்தான் நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அத்வானி உள்ளிட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் சர்மா ரேபரேலி நீதிமன்றில் கடந்த ஜீலை 28இல் தாக்கல் செய்து நீதிமன்றத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். ஆனால் ரேபரேலி நீதிமன்றம் இவரது மனுவை பொய்யானது என்று ரத்து செய்து விட்டமையின் பின்னரே பரபரப்புக் குறைவடைந்து போனது.

ஆனால் மூத்த வழக்கறிஞர் ஒருவர் இவ்வாறு நடந்து கொள்வது நீதித்துறைக்கு கிடைத்த அவமானம் என்றுதான் மக்கள் மத்தியில் சர்மா குறித்து விமர்சனமும் அதிருப்தியும் எழுந்திருக்கின்றதை மறுக்க முடியாது.

நீதியைக் காப்பாற்ற வேண்டியவர்களே நீதியை விற்று காசாக்க முனைகின்றனரோ....எனும் சந்தேகத்தை தான் சர்மாவின் மனு இயம்பி நிற்பதையும் ஏற்காமல் இருப்பதற்கில்லை.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான எல்.கே. அத்வானி அன்று உள்துறை அமைச்சராக இருந்த போதுதான் அயோத்தி தகர்ப்பு நிகழ்ந்தது. 1992 டிசம்பர் ஆறாம் திகதி நடைபெற்ற அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பானது ஒவ்வொரு ஆண்டு டிசம்பர் ஆறாம் திகதியும் மிகுந்த அச்சத்தையும் ஏற்படுத்தத் தவறியதில்லை எனலாம்.

எல்.கே.அத்வானி-முரளி மனோகர் ஷோஜி, உமாபாரதி விஸ்ப ஹிந்து பரிசட்டின் தலைவர்களான வினய் கத்தியார், அசோக் சிங்லால், கிரிராஜ் கிஷோர் விஷ்ணு ஹரிடால்மியா, சாத்வி சிதம்பரா ஆகிய எட்டுப் பேருமே அயோத்தி தகர்ப்பிற்கு காரணகர்த்தாக்கள் என்றே அன்று வழக்கு பதிவானது.

ஆனால் அன்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு எதுவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாது வழக்குப் பதிவு செய்ததோடு கண்டும் காணாது இருந்து விட்டது என்பதே அப்போதைய உண்மை

இதற்கு காரணம் 1992 காலப்பகுதிகளில் விஸ்வ ஹிந்து பரிசட்டின் ஆழ வேரூன்றியிருந்த செல்வாக்கு தான் எனலாம். அதனால் தான் பாபர் மசூதி தொடர்பான இடிப்பினை காங்கிரஸ் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தது. மாறாக மத்தியரசு நடவடிக்கை எடுத்திருப்பின் இந்துக்களுக்கு எதிரானவர்கள் எனும் முத்திரையினை குத்த வேண்டிய அவலம் ஏற்படும் என்பதாலேயே, வழக்குப் பதிவு செய்த தோடு மட்டும் நின்றுவிட்டது.


ஆனால் அயோத்தி இடிப்புடன் மத்தியில் பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியை தம் வசப்படுத்திவிட்டது எனலாம். உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி துணைப் பிரதமராக மாறியதும் அயோத்தியால் தான் என்பது அப்போதைய பிரபல்யம் .

அதுமட்டுமன்றி அத்வானி தனது துணைப்பிரதமர் பதவியின் செல்வாக்கினால் 2003 செப்ரெம்பர் 19ஆம் திகதி. அயோத்தி வழக்கிலிருந்து தன்னைவிடுவித்தும் கொண்டார்.

இதனையடுத்து அத்வானி அயோத்தி சாச்சையிலிருந்து மீண்டுவிட்டதாக பெருமூச்சு விட்டுக் கொண்டதெல்லாம் கிட்டத்தட்ட ஒருவருட காலம் தான் எனலாம்.

மத்தியில் ஆட்சிமாறியது அத்வானி மீதானவழக்கும் ஒட்டிக்கொண்டுவிட்டது எனலாம் அலகாபாத் ஹைகோட் லட்சுமணபுரி கிளையில் அத்வானி விடுதலை செய்யப்பட்டது செல்லாது என்று வழக்கு தொடரப்பட்டதையடுத்து அத்வானி மீண்டும் வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

இதனால்தான் அத்வானி உள்ளிட்டோர் மீது இந்திய தண்டனை முறை சட்டத்தின் கீழ், கலவரத்தை தூண்டியமை, மத உணர்வை தூண்டியமை வன்முறைக்கு வழிகோலியமை எனும் குற்றங்களுக்கமைய குற்றச்சாட்டுக்கள் பதிவாகியிருக்கின்றன.



அசோக்சிங்லால்

அதுமட்டுமன்றி கடந்த 13 வருடங்களாக அத்வானி உள்ளிட்டவர்கள் சுதந்திரப் பறவைகளாக சிறகடித்தனர். இன்றோ முன் பிணை அனுமதியின் கீழ்த்தான் வெளியே நடமாடிக் கொண்டிருக்கின்றனர் என்பதும் மிகுந்த வருந்தத்தக்க விடயம்தான்.!

அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட எட்டுப் பேரும் முதன் முதலாக நீதிமன்ற வாசலை மிதித்ததும் இதுதான் முதல் முறை.




இதுவரைகாலமும் பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணி எதிர்கட்சி வரிசையினை அலங்கரிக்கத் தொடங்கிய நாட்களிலிருந்தே இரு அவைகளையும் சீராக நடைபெற உதவியதை விடவும் புறக்கணிப்பில் ஈடுபட்டமையே அதிகம் என்பது ஆளும் கட்சித் தரப்பிலுள்ள குற்றச்சாட்டு.

அத்துடன் மத்தியரசில் புகையிரதத்துறை அமைச்சராக இருக்கும் லல்லுபிரசாத் யாதேவை குறி வைத்தே இரு அவைகளையும் முடக்கி வந்துள்ளன.

இதனால்தான் எதிர்க்கட்சியை தட்டி வைக்க வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சி அயோத்தி இடிப்பு வழக்கை துருவி எடுத்ததாக கூட நம்ப முடியும்.

ஆனால் அயோத்தி இடிப்பு வழக்கில் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்த மறுநாளே அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் வரை ஓயமாட்டோம் என்று அத்வானி முழங்க ஆரம்பித்துவிட்டார்.

இதனால் இந்துக்களிடையே இழந்துவிட்ட தனது செல்வாக்கினை தூக்கி நிமிர்த்தி விட முடியும் என்று அத்வானி நம்புகிறார்.ஆனால் அயோத்தியில் ஏற்கனவே இருந்த மசூதி இடிக்கப்பட்ட நிலையில் இராமர் கோவில் எழுப்பப்படுமானால் அது மதக் கலவரத்திற்கேதான் அடிகோலும் என்பதில் சந்தேகமில்லை.

சர்சைக்குரிய அயோத்தி பகுதி மத்தியரசின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் தான் தமக்கு நீதி கிடைக்கும் என்று முஸ்லிம்கள் ஓய்ந்திருப்பதாக முஸ்லிம் தரப்பு கூறுகின்றது.

இந்த நிலையில் அயோத்தியில் இராமர் கோவில் கட்டியே தீருவோம் எனும் அத்வானியினதும், சங்கப்பரிவார அமைப்புகளினதும் கோஷம் எதில் முடியும் என்பதைத் தற்பொழுது கூறிவிடமுயாது.

இவற்றையெல்லாம் மத்தியரசு கவனத்தில்கொண்டே அயோத்தி வழக்கை நகர்த்த முற்பட வேண்டும். இல்லையேல் மதம் அரசியலில் பாரிய தாக்கங்களை உண்டாக்கி விடும்.

இவற்றிற்கு மேலாக அத்வானி உள்ளிட்டஎட்டுப் பேரும் அயோத்தி வழக்கிலிருந்து இந்துக்களை பகடையாக்கி மீண்டிடுவர் எனும் ஆரூடம் உண்மையாகுமா..... பொய்யாகுமா.... என்பதும்

அ.கலைவாணி

அரசியலை மதம் எப்படியெல்லாம் மாற்றிவிடப் போகிறதோ..... எனும் அச்சமுமே இப்போது இந்தியாவை உலுக்கிகொண்டிருக்கும் வினாக்களாகும் என்றால் மிகையில்லை. □□□



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



# உழைப்பே உயர்வு தரும்

உலகளாவிய ரீதியில் தொழில் சார்ந்த விளையாட்டாக உதைபந்தாட்டம் பொலிவு பெற்று கோடிக்கணக்கான ரசிகர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

விளையாட்டு தொழில் சார்ந்ததாக மாறும் போது பயிற்சிகள் அவர்களுக்கு சித்திபெற வேண்டிய ஒரு துறைசார் கல்விபோல் அளிக்கப்பட வேண்டும். அங்கு அவர்கள் பெறும் அறிவு,திறன், மனப்பாங்கு என்பவையே அவனுடைய, அவர்களுடைய வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழ வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

அந்த வகையில் உதைபந்தாட்ட வீரர்கள் கடும் பயிற்சிகளைத் தொடங்க வேண்டும் என்பதுகட்டாயமானது. பயிற்சி என்பது அவர்களின் நடத்தைகளில் ஓர் நிலையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். விளையாட்டு பற்றிய பூரணமான அறிவு எந்தவொரு வீரனிடமும் காணப்பட்டு அந்த அறிவைக் கொண்டே அவன் தனது திறன்களை மிகவும் நுட்பமாகவும் சாமர்த்தியமாகவும் வளர்த்தெடுக்க வேண்டும். இதனூடாகதான் ஒரு உதைபந்தாட்ட வீரன் எந்தவெற்றியையும் சாதிக்கமுடியும் என்ற மனப்பாங்கு வீரர்களிடம் வளரும். இதற்காக அவன், கடுமையாக உழைக்க வேண்டும் ஒன்றை பெறுவதென்றால் பலவற்றை தியாகம் செய்யத்தான் வேண்டும். இந்த வகையில் தமிழர் தாயகத்தில் கால்பந்தில் கணிசமான முன்னேற்றம் கண்டுவரும் கிளிநொச்சி மாவட்டத்தில் உச்சதிறன் கொண்ட அணி ஒன்றை உருவாக்கும் ஆவலில் அண்மையில் பயிற்சியாளராக வருகைதந்துள்ள பிரான்சிஸ் சாண்டஸ் அவர்களை அணுகி கால்பந்தின் முன்னேற்றப் பாதை தொடர்பாக கலந்துரையாடினோம்.



*** கிளிநொச்சி மாவட்டத்தின் கால்பந்து வளர்ச்சியில் முன்னேற்றகரமான எதிர்காலம் உண்டா?**

நிச்சயம் உண்டு. இங்கு உடல் ரீதியான பலம் கொண்ட வீரர்கள் நிறையப்பேர் உள்ளனர். அவர்களுக்கு தேவை உதைபந்தாட்ட நுட்பம்தான். அவற்றை அவர்களுக்கு முறைப்படி வழங்கினால் இலகுவாக இலக்கினை அடையலாம்.

அத்துடன் தொடர் பயிற்சியானது இதற்கு முக்கிய பங்குவகிக்கிறது. அதாவது பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்கக் கூடிய மன நிலையில் வீரர்கள் நடந்து கொள்ள வேண்டும். ஏனோதானோ என்று எடுக்கும் பயிற்சி ஒரு வெற்றியைத்தரும் என்று நான் சொல்லமாட்டேன்.

*** தவறுகளை நிவர்த்தி செய்வதென்றால் எந்தவகையான அணுகுமுறையை மேற்கொள்ளலாம்?**

வீரர்கள் ஒழுங்கான முறையில் அழைக்கப்படவேண்டும், வீரர்களுக்கு பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் கிடைக்கப் பெற வேண்டும். நல்ல மைதானம் வேண்டும். பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஊட்ட உணவு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

*** திறமையாக விளையாடக்கூடிய தகுதியிருந்தும் கால்பந்துக்கு தே[illegible]வயான அணிகலன் இல்லாது விளை[illegible]ட்டிலிருந்து [illegible] வீரர்களை எப்படி உள்[illegible]ங்கலாம் என [illegible]கள்?**

இதற்கு முக்கியமானது அனுசரணை.அது இங்கு மிகக் குறைவு. தென்பகுதியைப் பொறுத்து தொழில் ரீதியில அவர்கள் கால்பந்தை விளையாடுகின்றனர். பயிற்சிக்கு போனால் சம்பளம், சம்பளமே அவர்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்துவிடும். இங்கு அதற்கு யாரும் முன் வருவதில்லை. அந்த அனுசரணையை ஒரு சில வீர்களுக்குத் தமிழீழ விளையாட்டுத்துறை செய்துகொண்டு வருகிறது. சில வீரர்களுக்கு இதனை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. அது நிறைவேறும் பட்சத்தில் திறமையான அணி ஒன்று கிளிநொச்சி மாவட்டம் என்ன தமிழீழ தேசிய ரீதியிலேயே பலம் வாய்ந்த அணியாக உருவாக்கம்பெறும் என நம்புகின்றேன்.



*** கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்டத்தை வளர்ப்பதற்கு முதற்கட்டமாக என்ன திட்டத்தை வைத்துள்ளீர்கள்?**

பாடசாலை ரீதியாக வீரர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை கொழும்பில் நடைபெறும தேசிய ரீதியிலான போட்டியில் வெற்றி வாய்ப்பொன்றை ஏற்படுத்துவதே எனது சிந்தனையாகவுள்ளது.

அதாவது 13, 14,1[illegible] வயது வீரர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்கி அவ்வணி கொழும்பு சென்று தேசிய ரீதியிலான போட்டியில் வெற்றியை இலக்காக வைத்துக் கலந்துகொள்ளும் போது கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்தடுத்த தலைமுறை கால்பந்தை இலகுவாக்கிக் கொள்ளும் என்பதே எனது திட்டமாகவுள்ளது. இதற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் எப்பாகத்திற்கும் சென்று பயிற்சி வழங்க தயாராகவுள்ளேன். அதாவது மேற்படி வயதுப் பிரிவினருக்கு ஒழுங்கான முறையில் முன்னர் பயிற்சி வழங்கப்படவில்லை. அது பெரும் பின்னடைவாகவுள்ளது. அதனை இனிவரும் காலங்களில் நிவர்த்தி செய்யும் போது கிளிநொச்சி மாவட்டத்தில் நுட்பம் வாய்ந்த கால்பந்து வீரர்கள் பிரதேசரீதியாக நிறையப்பேர் உருவாகிவிடுவார்கள்.

*** பயிற்சிக்கான வீரர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பீர்கள்.**

தற்போது ஒரு பயிற்சிப்பாசறை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது கிளிநொச்சி நகரை மாத்திரம் மையமாக வைத்து நடைபெற்று வருகிறது. இதனை விரிவுபடுத்துவது எமது கட்டாய தேவையாகவுள்ளது. அதற்கான திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளன. அதன் மூலம் பிரதேச ரீதியாக ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும். இதில் வேறுபாடுகளுக்கு இடமில்லை.

*** மேற்படி இத்திட்டங்கள் மூலம் எதிர் வரும் தமிழீழ தேசியபெரு விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியை முன்னணி அணியாக உருவாக்க முடியுமா?**

இதில் கருத்து வேறுபாடு உண்டு. வீரர்களை நான் நேரடியாக அணுக முடியாது. அவர்களை ஒன்றிணைத்து என்னிடம் ஒப்படைக்கும்போது மேற்படி கேள்விக்கான பதில் இலகுவாக அமைந்துவிடும் என்றார். இதற்கு நிறையக் காலங்கள் தேவைப்படாது. வீரர்கள் ஒன்றிணைக்கப்படும் போது மூன்றுமாதத்திலேயே நுட்பம் வாய்ந்த அணி ஒன்றை உருவாக்கித் தருவேன். அதுவே எனது இலட்சியமாகவுள்ளது.

*** தமிழர் தாயகத்தை பொறுத்தமட்டில் மன்னார் மாவட்டம் உதைபந்தில் சிறந்த வீர்களை கொண்டுள்ளது இதற்கான காரணம்?**


அங்கும் சடுதியாக ஏற்பட்ட முன்னேற்றம் தான். இதற்கு காரணம் கால்பந்து லீக்கால் ஒழுங்கு செய்யப்படும் தொடர் போட்டிகள் அடுத்து கொழும்பு அணிகளுக்கு ஒரு சில வீரர்கள் உள்வாங்கப்பட்டமை போன்றன ஏனைய வீரர்களைக்கால்பந்தின்பால் பிரியம் கொள்ள வைத்தது. இதனால் அங்கு தொடர் பயிற்சி மேற்கொள் ளப்பட்டது தொடர்ந்து சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இது வீரர்களை வளர்க்க உதவியது. அத்துடன் அவர்களின் உடல்வாகு கால்பந்துக்கு ஏற்றவிதத்தில் அமைந்ததும் அதற்கேற்ற வகையில் போட்டிகளும் அமைந்ததும் அதற்கும் மேலாக அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் நுட்பங்களை ஏனைய வீரர்களுக்கு கற்றக்கொடுத்தது போன்றன அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது என்றார்.

எனவே தமிழீழத்தைப் பொறுத்தளவில் விளையாட்டை உச்சப்படுத்துவதில் சகல தரப்பினரும் தோள்கொடுக்க ஆயத்தமாகியிருக்கின்றார்கள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம் நிச்சயம் நாமும் ஒரு மரடோனாவாகவோ, ரொனால்டோவாகவோ மாறுவோம் வெற்றிபெறுவோம்.

*மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் சாண்டஸ் பாடசாலை அணியில் முன்னணி வீரராகத்திகழ்ந்து பின்னர் 19 வயதுப் பிரிவில் மட்டக்களப்பு பாடுமீன் அணிக்காக விளையாடி பின்னர் மாவட்ட அணியில் வெற்றிக்கான வாய்ப்பை வழங்கக்கூடிய வீரனாக உள்வாங்கப்பட்டார். இவரது உதைபந்தாட்டக் குருவாக அருட்தந்தை போல் சற்குணநாயகம் செயற்பட்டார்.*

*பின்னர் மத்தியஸ்தத்துறைக்கு சென்று அதில் அபார திறமையை வெளிப்படுத்தி கொழும்புவரை சென்ற பின்னர் மத்தியஸ்தத் துறையில் 1995/96 காலப்பகுதியில் FiFA (சர்வதேச கால்பந்து சம்மேளனம்)வுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததும் அந்த வாய்ப்பைப்பெரும்பான்மை இனத்தின் சதியால் இழந்தார்.*

*தற்போது உதைபந்தாட்டத்துறையில் சி,பி. சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன் ஆசிய நாடெங்கும் சென்று கால்பந்து பயிற்சி வழங்கும் தகுதியுடையவர் என்ற தமிழரும் ஆவார். அத்துடன் அகில இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் ஆலோசகராக கடமையாற்றும் ஒரேயொரு தமிழரும் இவரே.*





# இரவுத்தூக்கம் போச்சு!

அவுஸ்திரேலியர்களுக்குக் கிரிக்கெட் என்றால் போதும் அது நடக்கிறது என்றால், பிற வேலைகளை ஒதுக்கி, ஓரங்கட்டிவிட்டு, குடையை எடுத்துக்கொண்டு மைதானங்களுக்கு வந்துவிடுவார்களாம் சாதாரண போட்டிக்கே, இப்படி என்றால்... அதிகம் எதிர்பார்க்கப்படும் ஆஷஸ் தொடர் என்றால் விடுவார்களா சும்மா?

ஆனால் பாவம் அவர்களுக்கு ஒரு சிக்கல். ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் இம்முறை இங்கிலாந்தில் நடக்கிறது. இங்கிலாந்துக்கும், இவர்களுக்கும் இடையே நேரவித்தியாசம் நிறைய, நிறைய! இங்கிலாந்தில் போட்டி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது. அப்போது அவுஸ்திரேலியாவில் நேரம் இரவு 7.30மணி ஆனாலும் கிரிக்கெட்டை நேசிக்கும்அவுஸ்திரேலியர்கள், 7.30க்குத் தொலைக்காட்சியைப் போட்டு அதன் முன்னால் இருந்துவிடுகிறார்களாம். தொலைக்காட்சி வரலாற்றிலேயே இது ஒரு புதியஅனுபவமாம் குறிப்பாக அவுஸ்திரேலிய அம்மணிகளும் 'கிரிக்கெட்தான் எங்கள் தேர்வு' என்கிறார்களாம். இரவு 7.30 க்கு ஆரம்பித்து கொட்டாவி விட்டபடியே விடிய விடிய அதிகாலை வரை கிரிக்கெட்தான் ஓடுகிறதாம். மொத்தம் ஐந்து டெஸ்ட் போட்டி அல்லவா? லண்டனில் ஒன்று முடிந்திருக்கிறது. இன்னும் நான்கு பாக்கியிருக்கிறது.

ஆஷஸ் தொடர் மொத்தமாய் முடிய செப்ரெம்பர் மாதம் ஆகும். அதுவரை பாவம்.. அவுஸ்திரேலியர்களின் இராத் தூக்கம் பேச்சு,

# மலையகத்தில் மொழி உரிமை தொடர்பாக பாரிய பிரச்சினைகள் தலைதூக்கும் வாய்ப்பு!

## அமைச்சர் டியு குணசேகர எச்சரிக்கிறார்

(கொழும்பு)

தோட்டத்துறையில் மொழி உரிமை தொடர்பில் பாரிய பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக அரசியலமைப்பு துறை அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர், இந்தப் பிரச்சினையானது வடக்கு கிழக்கு பிரச்சினையை ஒத்திருக்க வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறினார். மொழி சம்பந்தமான பிரச்சினை தோட்டப்பகுதிகளில் தற்சமயம் நிலவுகின்றது. 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பரம்பரை தற்சமயம் அங்கு இல்லை அங்கு படித்த பரம்பரை ஒன்று உருவாகிக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பரம்பரை தமது மொழி உரிமை தொடர்பாக குரல் எழும்பும் போது அது பாரிய பிரச்சினையாக மாறக்கூடும்.

தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தாம் தனித்து வாழ வேண்டும் என்ற கோசமும், எழுப்பப்படலாம் எனவே அதற்கு தற்போது உரிய மொழி உரிமைத் திட்டங்கள் அமுல் செய்யப்பட வேண்டுமென அமைச்சர் குறிப்பிட்டார். இதுதொடர்பில் தாம் சனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவையிலும் எச்சரிக்கை விடுத்தாக அமைச்சர் குறிப்பிட்டார். (32)

# தேசிய பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசு இடமளிக்காது

## -குமார் ரூபசிங்க கருத்து

(கொழும்பு)

சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்கள அரசு இடமளிக்கப் போவதில்லை என தற்பொழுது தமிழ் மக்கள் உணர்கின்றனர். இதை விடுதலைப்புலிகளும் கூறியுள்ளனர் என பேராசிரியர் குமார் ரூபசிங்க அறிவித்துள்ளார்.

தற்பொழுது கிழக்கில் நடக்கும் சம்பவங்கள் இதைக் குறிக்கின்றது. விசேடமாக தென் பகுதியில் நடக்கும் அரசியல் நிலவரங்களை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனபடியால் வடகிழக்கில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

# கேள்வி அறிவித்தல்-2005

## வலயக்கல்வி அலுவலகம்-தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| (01) | யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம் (I) மலசகூடத் திருத்த வேலை (10 பகுதிகள்) | ரூ. 250/- | ரூ. 700/- | தரம் 9 |
| | (II) அதிபர் அறை புனரமைத்தல் | ரூ. 500/- | ரூ. 2650/- | தரம் 9 |
| | (III)நீர் விநியோகம் | ரூ. 100/- | ரூ. 200/- | தரம் 9 |
| | (IV)உத்தியோகத்தர்களுக்கான மலசலகூடத் திருத்தம் | ரூ. 100/- | ரூ. 260/- | தரம் 9 |
| | (V)வகுப்பறைகள் அமைத்தல் | ரூ. 250/- | ரூ. 700/- | தரம் 9 |
| (02) | யா/ மட்டுவில் கமலாசனி வித்தி. (i) அதிபர் அறை, ஆசிரியர் அறை புனரமைத்தல் | ரூ. 250/- | ரூ. 4200/- | தரம் 9 |
| | (ii)நீர் விநியோகம், மலசலகூடத் திருத்தம், வகுப்பறைகள் அமைத்தல் 60x20 | ரூ. 250/- | ரூ. 2030/- | தரம் 9 |
| (03) | யா/ மிருசுவில் றே.க.த.க.பா மேல மாடி அமைத்தல (60'x25') | ரூ. 500/- | ரூ. 11.000/- | தரம் 8 |

01 (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின், 09 ஆம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப்பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ் வேலையைச் செய்து முடிக்க முடியுமானால்தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிககலாம் பாடசாலை
அபிவிருத்திச்சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும், மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

02 கேள்விப் பத்திரங்களில் பெறுமதிசேர் வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03 மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 01.08.2005 ஆம் திகதியில் இருந்து 09.08.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை தென்மராட்சி கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்று கொள்ளலாம்.

04 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு, கடித உறையில் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இருபிரதிகளையும பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத் திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

05 தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களையும் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

திருமதி றே. இருதயநாதன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி

(சி-12395)

# சனாதிபதித் தேர்தலுக்கான திகதிக்கு எதிர்ப்பு ஏற்படின் நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர் திட்டம் வகுப்பு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அதனை ஆட்சேபித்து யாரும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையாளர் திட்டங்களை வகுத்திருப்பதாக கூறப்படுகின்றது.

இதுதொடர்பாக அவர் பிரதம நீதிபதியு டன் பேச்சுநடத்தியிருக்கும் அதேவேளை உதவித்தேர்தல் ஆணையாளருடனும் கலந்துரையாடியிருப்பதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்

மேற்படி தேர்தல் நடைபெறும் திகதியை இம் மாதம் நடுப்பகுதியில் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் அமைப்பின் பிரகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி அவர் தேர்தல் தினத்தை அறிவிப்பார். எனினும் சில அரசியல் கட்சிகள் அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லவிருப்பதாக தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் 2004ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வாக்காளர் டாப்பின் அடிப்படையிலேயே இத் தேர்தல் நடைபெறும் என்றும் முடிவுகளை விரைவில் அறிவிக்கக் கூடிய வகையில் தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து பணியாற்றும் கணினி நிறுவனத்திடம் ஆணையாளர் பேச்சு நடத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# 2 இலட்சம் பெறுமதியான நகைகள் மீட்பு!

(கொழும்பு)

தங்க ஆபரண விற்பனை நிலையங்களில் ஆபரணங்கள் கொள்வனவு செய்வது போன்ற பாவனையில் ஆபரணத் திருட்டில் ஈடுபட்டு வந்த ஒருவரை பம்பலப்பிட்டி பொலிசார் கைது செய்து வெள்ளவத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட இவரிடம் இருந்து இரண்டு இலட்சம் பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# இரு வெளிநாட்டவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

நாட்டுக்குள் சட்ட விரோதமாக உட் பிரவேசித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கட்டுநாயக்கா விமானத் தளத்தில் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்த ஈரான் மற்றும் ஈராக் நாட்டவர்கள் இருவர் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்ட வேளை வத்தளைப் பிரதேசத்தில் வைத்துத் தப்பியோடியுள்ளனர். இவர்களைத் தேடும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.(32)

*-அநுராதபுரம் பகுதியில்-*

# பிச்சை எடுப்பவரின் வங்கிக் கணக்கில் மூன்று லட்சம் ரூபா கண்டு பிடிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் பகுதியில் பிச்சை எடுப்பவரின் வங்கிப் புத்தகங்களில் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் பணம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் பேருந்து ஒன்றில் மோதி பிச்சை எடுப்பவர் ஒருவர் இறந்துள்ளார். சம்பவ இடத்திற்கு வந்த அநுராதபுர பொலிசார் இறந்தவரின் பிரேதத்தை பரிசீலனை செய்த போது ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் இரண்டு மக்கள் வங்கிப் புத்தகங்களையும் ஒரு தேசிய சேமிப்பு வங்கிப் புத்தகத்தையும் கண்டெடுத்துள்ளனர். இவற்றில் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிடப்பட்டிருந்தது. அவரிடமிருந்த ஆவணங்கள் மூலம் அவரது பெயர் கருணாநாயக்கா பியதாச எனவும் அறியப்பட்டுள்ளது.

## ஆண்டுகள் 25 ஆகியதோ!

மலர்வு 14 11 1935



உதிர்வு 02 08 1980

## அமரர்- சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன் (மாதகல்)

ஊர்க்காவலனாய் வாழ்ந்து
மார்பினில் குண்டேந்தி மறைந்த
எங்கள் அன்புத் தந்தையே!
இன்று நீங்கள் மறைந்து கால்
நூற்றாண்டுகளா?
எம்மால் நம்ப முடியவில்லையப்பா.
உம்முடைய ஆற்றல்களை!
அருஞ்செயல்களை!
இன்றும் அறிகின்றோம். வியக்கின்றோம்!
என்றும் எங்கள் காவலனாய் இருந்து
எம்மைக் காத்திட வழிநடத்திட
வேண்டுகின்றோம்.

த.முகவரி,
நக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(6509)

உங்கள் நினைவுகளுடன்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

# CARITAS - HUDEC JAFFNA

## VACANCY

1. Field coordinator

*Base Station : Mulaitivu*

**Main Duties:**

- Regular visits to monitor progress of programme activities and regular reporting back to senior Project Manager.
- Maintain regular contacts with local authorities (GA,AGA,GS) and community leaders.
- Assist in preparing activity reports as required and purchasing procedure.
- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Post based in Mulativu, with regular visits to Kilinochchi and Jaffna.

***Requirements:***

- NCT in Civil Engineering or equivalent with 3 years experience in the same field.
- Good analytical skill and field experience in Civil Site.
- Experience in Project Planning, Implementation, Monitoring and Evaluating.
- Excellent skill in monitoring implementation of program activities.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Good knowledge of writen and spoken English and able to prepare Monthly Progress Report.
- Good team player.

2. Field Officers

*Base Station : Mulaitivu (3 Positions)*

**Main Duties:**

- Monitor the distribution of all goods distributed to the select beneficiaries.
- Assist in all programme implementation activities and inform the field coordinator of all the progress of the undertaken activities.
- Give regular information to the Field Coordinator or the Project Manager to whom he provides detailed and exhaustive news of the evolution of operations.
- Manage the skilled labour (masons, carpenters etc.)
- Fluency in Tamil & English.

***Requirements:***

- NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
- Experience in Implementation, Monitoring and Evaluating.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Good team player.

3. Logistician / Store keeper

*Base Station: Mulaitivu*

**Main Duties:**

- Plan & Manage all activities related to procurement, transportation &storage of materials & equipment as necessary for program implementation.
- Assist the Purchasing Officer in preparing tender documents & receipt of quotation as necessary.
- Manage & maintain the warehouse according to professional standards & Hudec/Caritas guidelines.
- Ensure purchase Procedure are Respected & all procedure regarding the warehouse.

***Requirements:***

- Have excellent knowledge in Logistic field with 2 years experience.
- Strong interpersonal and liaison skills.
- Computer literacy in Win Word, Excel and email software.
- Planning and monitoring Logistics items.
- Knowledge in the contract and supplying of stock.

4. Finance officer

*Base Station : Mulaitivu*

**Main Duties:**

- Set up and maintain efficient finance systems to support Program Activities (filling..............)
- Prepare the vouchers and check all bills and forward to the Budget Controller as per requirement.
- Ensure cash book, bank book and petty cash book are maintained effcient and accurately in coordination with the Finance Controller.
- Preparing and entering **TALLY** software ledger books.

***Requirements:***

- Accurate accounting skills & background (ATT/CIMA) with 2 years experience in other organization.
- Knowledge in administrative organization and finance management.
- Computer skills.
- Honesty & transparency.
- Fluency in Tamil & English.

5. Livelihood officer

*Base Station : Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)*

**Main Duties:**

- Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluation.
- Organize training & workshops to build & improve capacities of the above mentioned staff.
- Represent Caritas - Hudec on the issue of livelihood & income generating activities at district & divisional level coordination meetings withgovernment, NGO's UN orgnizations & the private sector.
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.
- Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture. small enteprises)

***Requirements:***

- Demonstrate management experience with a special emphasis on project management related to micro - enterprise and income generating activities.
- Experience using word processors, spread Sheets & email.
- Knowledge & experience working with participatory.
- Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector.
- Fluency inTamil & English.
- Good communication skills.

6. Watchman

*Base Station: Mulaitivu (2 positions), Vettilaikerny (1 position)*

**Main Duties:**

- *Watch the overall compound (main building, store, garages, drivers room........) make sure the main gate is open between 6 hoo and 21h30 except special occasions.*
- *Receive any visitors and answer to their requests - the coming of any visitors should be announced to the office by phone.*
- *Check everything is in order in the compound after working day and report any mistake to the logistic officer to solve it if necessary.*
- *Maintain the compound clean. cleaning will be done on a daily basis.*

***Requirements:***

- *I Year experience in the same field.*
- *Should be aware of any entrance of person in the compound.*
- *Minimum English skills.*
- *Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.*
- *strong interpersonal and liaison skills.*

***Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.***

***if you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by.***

***15 August 2005***

***Father Jeyakumar***
***Caritas - Hudec Jaffna***
***14 Mathew's Road, Deogu Street,***
***Jaffna.***

**or.e-mail: hudec @ sltnet.lk**

***PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS.***

(சி-12471)


## திரினாமுல் காங்கிரசிலிருந்து விலகியோர் காங்கிரசில்

மம்தா பானர்ஜியின் திரினாமுல் காங்கிரசில் இருந்து விலகிய தலைவர்கள் காங்கிரசில் இணைகிறார்கள்.

மம்தா பானர்ஜியுடன் ஏற்பட்ட கருத்து மோதலைத் தொடர்ந்து அவரது திரினாமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்து முன்னாள் கொல்கத்தா மேயர் சுபத்ரா முகர்ஜி தலைமையில் முக்கிய தலைவர்கள் விலகி பாஷிம் பங்கா உன்னாயன் மஞ்ச் என்ற புதிய அமைப்பை தொடங்கினார்கள்.

இப்போது இந்த அமைப்பை காங்கிரசுடன் இணைத்துவிட சுபத்ரா முகர்ஜி முடிவு செய்துள்ளார். சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசிய பின் இணைப்புவிழா நடக்கும். திகதி முடிவு செய்யப்படும் என்று சுபத்ரா முகர்ஜி கூறினார்.

சுபத்ரா முகர்ஜியுடன் முன்னாள் மேயர் மாலாராய் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அம்பிகாராய், பரஸ்தத்தா, நிகாத்ராய் உட்பட ஏராளமான தொண்டர்கள் காங்கிரசில் இணைகிறார்கள்.

## மும்பையில் மீண்டும் மழை வெள்ளம்

மழை வெள்ளத்தின் பிடியில் இருந்து லேசாகமீண்டு எழுந்த மும்பை மற்றும் மராட்டியத்தின் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் மீண்டும் பலத்தமழை பெய்தது.


கொலாபா பகுதியில் நேற்று முன்தினம் பகல் 11.00 மணிவரை 42.6 செ.மீ மழை பதிவாகியது. சாந்தாகுரூஸ் பகுதியில் 41.2 செ.மீ மழை பதிவானது. இம்மழை நேற்றுவரை தொடர்ந்தது.

மழை தொடங்கியிருப்பதை அடுத்து மும்பை நகர வாசிகள் வெளியில் வரவேண்டாம் என மும்பை பொலிஸ் எச்சரித்துள்ளது.

நேற்று முன்தினம் மும்பை நகரில் குர்லா,மல்லாட் அந்நேரி பகுதிகளில் புறநகர் புகையிரத தண்டவாளங்கள் நீரில் மூழ்கின. இதையடுத்து புகையிரத போக்குவரத்து அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. மராட்டியத்தின் இதர பகுதிகளிலும் நேற்று முன்தினம் கடுமையான மழை பெய்தது. இதையடுத்து புனேயில் இருந்து புறப்படும் புகையிரதங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

## மும்பை நகரம் வெள்ளக் கோலத்தில்









*கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்ற 21ஆவது மாவட்ட மெய்வன்மை போட்டியில் முதலாமிடத்தை கரைச்சிப்பிரதேச சபையும், இரண்டாமிடத்தை கண்டாவளை பிரதேசசபையும், மூன்றாமிடத்தைப் பூநகரிப்பிரதேச சபையும் பெற்றுக்கொண்டன.*

## 21ஆவது மாவட்ட மெய்வன்மைப் போட்டி; கரைச்சிப்பிரதேச சபைக்கு முதலிடம்

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான 21ஆவது மாவட்ட விளையாட்டுப்போட்டி நேற்று நடை பெற்றது.

கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் புதிய மாவட்ட சாதனைகளும் நிலை நாட்டப் பட்டன.

பிரதேச செயலர் பிரிவுகளின் அடிப்படையில் 225 புள்ளிகளைப் பெற்று கரைச்சி பிரதேச சபை முதலாம் இடத்தையும், 141 புள்ளிகளை பெற்று கண்டாவளை பிரதேச சபை இரண்டாம் இடத்தையும், 70 புள்ளிகளைப் பெற்று பூநகரி பிரதேசசபை மூன்றாம் இடத்தையும் 36 புள்ளிகளைப்பெற்று பளை பிரதேச சபை நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா ஞாபகார்த்த பாடசாலை அணிகளுக்கிடையிலான மென்பந்துப்போட்டி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற பாட சாலைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட் டப்போட்டியின்;

முதல்போட்டியில் இரணைப்பாலை மகாவித்தி யாலய அணியினர் கற்சிலைமடு அ.த.க.பாட சாலை அணியை 33 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றிபெற்றனர்.

இரண்டாவது போட்டியில் பாலிநகர் மகாவித் தியாலய அணியினர், முள்ளியவளை வித்தி யானந்தாக்கல்லூரி அணியினரை இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றனர். பாலிநகர் அணியின் சார்பில் நவீன்ராஜ் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

மூன்றாவது போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியினர் இரணைப்பாலை மகா வித்தியாலய அணியினரை 30 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வென்றனர்., மல்லாவி மத்திய கல் லூரியின் சார்பில் கோகுலன் 37 ஓட்டங் களைப்பெற்றார். இப்போட்டிகளின் நடுவராக குமார்,மாதவ ஜெயபிரகாஸ்,சகிதரசீலன், ஆசை நாதர் ஆகியோர் கடமையாற்றினார்கள். (சி)

## யாழ். மாவட்ட ரீதியிலான இருபாலாருக்குமான கூடைப்பந்து போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை, தமிழீழ மாணவர் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திவரும் கூடைப்பந் தாட்டச்சுற்றுப்போட்டி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடை பெற்றுவருகின்றது. இன்றும், நாளையும் நடைபெறவுள்ள அரை இறுதியாட்டத்தில் பங்குகொள்ளும் அணிகள் விபரம் வருமாறு:- இன்று மாலை நான்கு மணிக்கு ஆண்கள் பிரிவில் - யாழ்ப்பாணம் ஜொனிலிசன் எதிர் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியும் மாலை ஐந்து மணிக்கு பெண்கள் -பிரிவில் யாழ்பல் கலைக்கழக அணியை எதிர்த்து உடுவில் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

நாளை மாலை நான்கு மணிக்கு சென்ட் லைட்ஸ் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஒல்கோஸ்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை ஐந்து மணிக்கு பெண்கள் பிரிவில் கொக்குவி ் மத்திய சனசமூக விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து பட்டபிளை விளை யாட்டுக்கழகமும் மோதுகின்றன.

## அகில இலங்கை ரீதியிலான கால்பந்து போட்டி மன்னார் புனித சபேரியர் கல்லூரி சம்பியன்

மன்னார் புனித சபேரியார் ஆண்கள் தேசி யக்கல்லூரி நேற்று முன்தினம்கண்டி பொது விளையாட்டரங்கில் இடம் பெற்ற 13வயதிற் குட்பட்ட அகில இலங்கை உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று அகில இலங்கை சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டியில் கண்டி சாஹிராக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய மன்னார் புனித சபேரியார் ஆண்கள் தேசியக்கல்லூரி 3-1 என்ற கோல் கணக்கில் அகில இலங்கை வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியில் வெற்றியீட்டியமைக்காக மன்னார் மக்களினால் மன்னார் நகரத்தில் வைத்து இவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. (18)

## தாச்சி சுற்றுப் போட்டி சம்பியனானது கலாஜோதிஅணி

தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணை யுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடாத்திய தாச்சி சுற்றுப்போட்டியின் இறுதியாட் டம் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட் டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலா ஜோதி விளையாட்டுக்கழகம் போட்டியிட்டது. கலாஜோதி விளையாட்டுக்கழம் 8-1 என்ற புள்ளி அடிப்படையில் சுதுமலை நாவலர் விளையாட் டுக்கழகத்தை இலகுவான முறையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (கீ)

## மென்பந்து, தாச்சிப்போட்டி விண்ணப்பத்திகதி நீடிப்பு

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சங்கத்தால் நடாத்தப்படவிருக் கின்ற மென்பந்து, தாச்சிப்போட்டிக்கான விண் ணப்பங்களின் விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது. இதற்கு கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பிக்க முடியும். இதே வேளை கரைச்சிப்பிரதேசத்திற்குட்பட்ட கால் பந்துப்போட்டிக்கான விண்ணப்பமும் மேற்படி திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. எனவே பதிவு செய்யாத விளையாட்டுக் கழகங்களை பதிவுசெய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திசங்கத்தினர் கேட் டுள்ளனர். இப்போட்டிகள் இம்மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது எனவும் அவர் கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இங்கிலாந்து அணியில் மாற்றமில்லை கவலைப்படப் போவதில்லை—ஹெய்டன்



கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமான ஆஷஸ் கிண்ணத்துக்கான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கி லாந்து அணி 239 ஓட்டங் களில் பாரிய தோல்வி கண்ட போதிலும் அணியில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தாது. நாளை மறுதினம் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் அதே அணி பங்குபற்றினாலும் தாம் அதைப்பற்றி கவலைப் படப் போவதில்லை என அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மத்தியுஹெய்டன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கும்போது; இங்கிலாந்து அணி என்ன செய்தாலும் நன்றாக துடுப்பெடுத்தாட வேண்டிய பொறுப்பு தமது துடுப்பாட்ட வீரர்களிடமே உள்ளதாகவும், இங்கிலாந்து அணியின் ஹார்மிசன், பிளின்டொப் ஆகியோரின் பந்துவீச்சை லோட்சில் நடைபெற்ற போட்டியின்போது குறைத்து மதிப்பிட வில்லை என்றும் ஹெய்டன் கூறினார். ஹெய்டன் அண்மையில் நடைபெற்ற கவுண்டி போட்டிக்கு எதிரான போட்டியில் 79 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெயசூரிய தொடர்ந்தும் ஆடுவார் அவரது வைத்தியர் தெரிவிப்பு



கடந்த 30 ஆம்திகதி தம்புள்ளயில் நடைபெற்ற முக் கோண கிரிக்கெட் தொடரின் இந்தியாவுக்கெதிரான போட்டியின்போது சிறி லங்கா துடுப்பாட்டவீரர் சனத் ஜெயசூரிய தோளில் காயம் ஏற்பட்டபோதும் நாளை அதே அணிக்கெதிரான இரண்டாவது போட்டியில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் பாரிய தாக்கம் ஏதும் நடைபெறவில்லை என்று தெரிவித்துள்ளனர். எனினும் அவர் இன்று நடைபெறும் மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டி யில் கலந்து கொள்ளமாட்டார்.

அவரை நன்கு (ஸ்கேன்) பரிசோதனை செய்த வைத்தியர்கள் எதிர்பார்த்தளவு பாதிப்பில்லை என்பது தமக்கு மகிழ்ச்சி யளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

36 வயதான ஜெயசூரிய 2002ஆம் ஆண்டிலும் உபாதைக்கு ஆளாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் தரவரிசை பட்டியல் இரண்டாவது இடத்தில் சிறிலங்கா




ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரி சைப் பட்டியலில் சிறிலங்காவுக்கு இரண் டாவது இடமும், இந்தியாவுக்கு ஏழாவது இடமும் கிடைத்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட்போட்டி தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் உலக சம்பியன் அவுஸ்திரேலியா தொடர் ந்து முதலிடத்தை தக்கவைத்துக்கொண் டுள்ளது. அந்த அணி 136 புள்ளி பெற் றுள்ளது. இந்திய அணி 95 புள்ளியுடன் ஏழாவது இடத்தில் இருக் கிறது. இந்திய அணிக்கு பின்னர் மேற்கிந்தியதீவு சிம்பாப்வே, பங்களா தேஷ் அணிகள் உள் ளன. சிறிலங்கா 120 புள்ளியுடன் இரண் டாவது இடம் வகிக் கிறது.

விளையாட்டு

## அகாஸி சம்பியன்




முன்னணி வீரர்கள் பங்கேற்கும் மெர்சிடெஸ் கோப்பை டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தது. அரை யிறுதிப்போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. முதல் அரையிறுதியில் அமெரிக்காவின் 35 வயது சீனியர் வீரர்ஆந்த்ரே அகாசி,ஆர் ஜென்ரீனாவின் ஜுவன் இக்னேஷியாசெலா மோதினர். இந்தப் போட்டியை அகாசி 6-4,6-2 என்ற செட்களில் வென்று இறுதிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில்அகாசி, லக்சம்போர்க் வீரர் கைல்ஸ் முல்லரைச் சந்தித்தார்.அரையிறுதியில் முல்லர் 4-6,7-6, (7/4), 6-1 என்ற செட்களில் சுலோவாக்கியா வீரர்டொமினிக் ஹெர்பட்டியை வீழ்த்தினார். இறுதிப்போட்டியில் கைல்ஸ் முல்லரை ஆந்த்ரேஅகாசி 6-4,7-5 என்ற செட்களில் வென்றார்.

*உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி மான்ட்ரியலில் நடக்கிறது. ஆண்களுக்கான 100 மீற்றர் 'பட்ட பிளை' பிரிவில் அமெரிக்காவின் இயான் கிராக்கர் (வலது) புதிய உலக சாதனை படைத்தார். போட் டித் தூரத்தை இவர் 50.40 வினா டிகளில் கடந்து தனது முந்தைய சாதனையை (50.76 வினாடி) முறி யடித்துள்ளார். ஏதென்ஸ் ஒலிம்பிக் கில் ஆறு தங்கப் பதக்கம் வென்ற அமெரிக்காவின் மைக்கேல் பெல்ப்ஸ் (51.65 வினாடி) வெள்ளிப் பதக்கம் வென்றார்.*



## சிந்தனைக்கு



எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர் ;எமது இனத்தின் ஆன்மா

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சரத்துக்களை அமுல் செய்க!

போர் நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும் எனஅண்மைக்காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் அடிக்கடி கோருவதுண்டு. இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அரசாங்கம் முறையீடு செய்துமுள்ளது. ஆனால் பரிசீலனைக்குட்படுத்தும் வகையில் சூழ்நிலை இல்லை என்பதே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தீர்மானமாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தமோ, மாற்றமோ செய்வதானால் இரு தரப்பும் இதற்கு உடன்பட்டாக வேண்டும். இது ஒரு தரப்பு விவகாரம் அல்ல என்பதே போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முடிவுக்கு அடிப்படையாகும். இது உடன்பாட்டுச் சரத்திற்கு உட்பட்ட விடயமாகும்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இக்கோரிக்கை மூலம் போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள குறைபாடுகளே இன்றைய குழப்பகரமான நிலைக்குக்காரணம் போன்றதானதொரு கற்பிதத்தைக் கொடுக்க முனைந்துள்ளதோடு, விடுதலைப் புலிகள் இவ் உடன்பாட்டின் மூலம் அனுகூலங்களை அனுபவிப்பது போன்றதான தோற்றப்பாட்டை வெளிக்காட்ட முற்படுவதாகவும் உள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகள் அரசின் இக்கோரிக்கையை ஏற்பதாக இல்லை. இதற்கு அவர்கள் நியாயப்பாடான காரணத்தையும் தெரிவித்துள்ளனர். அதாவது தற்போதைய நிலைக்குப் போர்நிறுத்த உடன்பாட்டில் தவறு உள்ளமை காரணமில்லை. மாறாக, அதில் உள்ள சரத்துக்கள் அரசாங்கத்தால் அமுலாக்கம் செய்யப்படாமையே காரணம் என்பதே அவர்களின் விளக்கமாகும்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில், யுத்த நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளபோதிலும் இன்னமும் யுத்தநிறுத்தம் தாக்குப் பிடிக்கின்றதெனில் யுத்த நிறுத்த உடன்பாட்டில் தவறில்லை என்பது வெளிப்படுவதாகவே கொள்ளலாம். அவ்வாறு இருக்கையில், யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏன் மாற்றம் செய்ய வேண்டும்?இதன் நோக்கம் என்ன?

சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் -சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பை சம அந்தஸ்தில் வைத்துப் பேசுவதற்குத் தயாராக இல்லை. இன்னொருவகையில் யுத்தநிறுத்தத்தின் அடிப்படையில் பேசுவதானால் புலிகளுக்குச் சமஅந்தஸ்து வழங்குவது அவசியமானதாகிவிடும். ஆகையினால், யுத்தநிறுத்தத்தின் மூலம் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சம அந்தஸ்தை இல்லாது ஒழித்துவிடுவதே அரசின் நோக்கமாகும்.

இதன் காரணமாகவே நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் யுத்தநிறுத்த உடன்பாடு மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும் என சனாதிபதி சந்திரிகா தரப்பு வலியுறுத்தி வருகின்றது.ஆனால் இவ்யுத்த நிறுத்த உடன்பாடு கால எல்லைகளுடன் கூடிய வரையறைகளுடன் தெளிவான சரத்துக்களுடன் கூடியதாக உள்ளது என்பதே உண்மையாகும்.


இன்று யுத்தநிறுத்தத்தைக் கேள்விக்குள்ளாக்கும் விடயங்களாக மூன்றுவிடயங்களை அடையாளம்காணக் கூடியதாகவுள்ளது. ஒன்றுதமிழ் இனத் தேசவிரோதக்குழுக்களைத் தொடர்ந்தும் சிங்கள ஆட்சியாளர்கள் தமது தேவைக்காகப் பயன்படுத்துதல்.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கை யுத்தநிறுத்தத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்பதை இன்று அமெரிக்கா உள்ளிட்ட முன்னணி நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆகையினால் உடன்பாட்டு விதிகளின்படி தமிழ் இனவிரோதக் குழுக்களை நிராயுதபாணிகள் ஆக்குவதும், அவர்களை வடக்கு-கிழக்கிற்கு வெளியில் கொண்டு செல்வதன் மூலம் உடன்பாட்டைப் பாதுகாக்க முடியும்.

அடுத்ததாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளூடாக விடுதலைப் புலிகளின் போக்குவரத்து, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல்பணி என்பனவாகும். இவை இரண்டும் யுத்தநிறுத்த உடன்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகையினால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாக ஆயுதமின்றிப் பயணிப்போருக்கும், அரசியல் பணியில் ஈடுபடுவோருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது ஆயுதப்படைத்தரப்பின் கடமைப்பாடாகும்.

மூன்றாவதாக மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரமாகும். மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு யுத்தநிறுத்த உடன்பாடு பூரண அங்கீகாரம் அளிக்கையில் பாதுகாப்பு ஏற்பாடு என்ற ரீதியில் ஆயுதப்படைத்தரப்பு அதாவது அரச தரப்பு மக்களின் இயல்பு வாழ்விற்கு முட்டுக்கட்டை போட்டுவருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளால் மக்களின் மீள்குடியேற்றம், தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

இந்நிலையில், யுத்தநிறுத்த உடன்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை எதுவும் இல்லை. உடன்பாட்டை அரசாங்கம்- அதாவது சிறிலங்கா ஆயுதப்படையும், அதன் புலனாய்வுத்துறையும் ஏற்று நடந்தாலே,அதாவது யுத்தநிறுத்த சரத்துக்களை அமுல் செய்தாலே யுத்தநிறுத்தம் வெற்றிகரமானதாக அமையப் போதுமானதாகும்.



செய்தி- யுத்தத்திற்கு அரசாங்கம் தயாராவதாக பொதுமக்கள் மட்டத்தில் சந்தேகம்...

# மலையக சகோதரர்களை இழிவு படுத்திய மேர்வின் சில்வா பதவி விலக வேண்டும்

## தமிழ் கூட்டமைப்பு பா.உ.ரவிராஜ்

(கொழும்பு)

மலையகத் தமிழ் சகோதரர்களை இழிவுபடுத்திய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பதவி விலக வேண்டும் என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

மலையக சகோதரர்களை இழிவாகப் பேசிய பிரதிஅமைச்சர் மேர்வின் சில்வா அமைச்சுப் பதவியில் இருந்தும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தும் விலக வேண்டும். இவரது செயற்பாட்டைக் கண்டித்து மலையகமக்களின் தலைமைகள் எடுக்கும் எத்தகைய போராட்டத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்களமக்களின் ஆதரவைப் பெறாத மேர்வின் சில்வா பின் கதவால் பாராளுமன்றத்துக்கு சென்றுவிட்டு மலையக சகோதரர்கள் மீது வசைபாடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால் பிரதியமைச்சர் சகோதர மக்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியமை கீழ்த்தரமான செயலாகும் என்றும் தெரிவித்த அவர், மேர்வின் சில்வா வணங்கும் புத்த பகவான் கூட இந்தியாவிலேயே பிறந்தார். இதனை அவர் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதியமைச்சர் இவ்வாறு வசைபாடிய பின்னரும் மலையகத் தலைமைகள் இவ்விடயத்தில் மௌனம் சாதிப்பதானது தமக்கு கவலையளிப்பதாகத் தெரிவித்த ரவிராஜ், மேர்வின் சில்வாவின் மகனுக்கு பிணை வழங்கியமை எந்த சட்டத்தின் கீழ் என்பதை பொலிஸ்மா அதிபர் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஆடு,மாடு என்பவற்றை களவெடுப்பவர்களுக்கே இருவாரம் விளக்கமறியல் வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

எந்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ்மா அதிபர் இதனை வழங்கினார் என விபரிக்க வேண்டும். இந்த நிலையில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலுக்கு சனாதிபதியோ, பிரதமரோ மன்னிப்புக் கோரவில்லை. இந்தியாவில் ரயில் விபத்து நடந்தாலே குறித்த அமைச்சர் பதவி விலகுவது வழக்கம். பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவோ ஒரு சமூகத்தை இழிவுபடுத்தியுள்ளார். அதனால் அவர் பதவி விலக வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார். (32)

# பொருளாதாரத்தை உயர்த்துவதே ஐ.தே.க யின் தேர்தல் தொனிப்பொருள்

(கொழும்பு)

பொருளாதார நிலையை உயர்த்துவதே சனாதிபதித் தேர்தலின் பிரதான தொனிப் பொருளாகும் என ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி மக்களுக்கு நன்மை கிடைக்கும் விதத்தில் மாற்றி அமைப்பதாக ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விசேடமாக தொடருந்து மற்றும் பேருந்துக் கட்டணங்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம் என்பன மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு பொருட்களின் விலையேற்றம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# ஆளும்கட்சி,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 25பேருக்கு இலஞ்ச ஊழல் விசாரணை

(கொழும்பு)

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 25 பேருக்கு எதிராகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலஞ்ச ஊழல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக பிரபல அரசியல்வாதிகள் பலரிடம் ஏற்கனவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இலஞ்ச ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அது தவிர பொலிஸ் மற்றும் முப்படைகளைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள், தற்போது ஆணைக்குழு விசாரணை செய்யும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1361 ஆக அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

# சிவராமின் கொலை தொடர்பான சாட்சிகளின் சாராம்சம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)


ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலை தொடர்பான சாட்சிகளின் சாராம்சம் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளினால் கடுவெல நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலை தொடர்பாக தமிழ் ஆயுதக் குழுவொன்றின் முக்கிய பிரமுகர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆறுமுகம் சிறீஸ்கந்தராஜா எனப்படும் பீற்றர் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டாலும் சாட்சியாளர்கள் எவரும் அவரை அடையாளம் காட்டவில்லை.

ஆகவே சந்தேகநபரை விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றைக் கேட்டனர். அது தொடர்பாக இன்று ஆராயப்படவுள்ளதாக நீதவான் தெரிவித்தார். (32)

# தென்சூடான் விடுதலை அமைப்பின் தலைவர் உலங்குவானூர்தி விபத்தில் மரணம்!

## -தலைநகர் கார்ட்டூமில் வன்முறை



தென் சூடானிய விடுதலை அமைப்பின் தலைவரும், சூடானின் துணை அதிபருமான ஜோன் கிறாங் நேற்று இடம்பெற்ற உலங்குவானூர்தி விபத்தில் சாவடைந்துள்ளதாக சூடானில் நிலை கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உகண்டா சனாதிபதியைச் சந்தித்து விட்டு சூடான் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தென் சூடானிய மக்களின் விடுதலைக்காக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுதப் போராட்டத்தை தலைமையேற்று வழிநாடாத்தி வந்த ஜோன் கிறாங் சூடானிய அரசுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் துணைத் தலைவராக் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பே பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து ஏற்பட்ட வன்செயல்களை தொடர்ந்து தலைநகர் கார்ட்டுமில் சூடானிய அதிகாரிகள் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனஞ் செய்துள்ளனர்.

இந்த அமைதியின்மையில் பொலிசார் உட்பட குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. இவர் உயிரிழந்த செய்தி பரவிய அதேவேளை, நாட்டின் தென்பகுதியில் இருந்து வந்த இளைஞர் குழுவினர் கார்ட் டூமில் கடைகளை அடித்துநொருக்கி, கார்களை எரித்து பாதுகாப்புப் படையினருடன் மோதலிலும் ஈடுபட்டனர்.

கிறாங் முன்னின்று நடத்திய சமாதானப் பேச்சுக்களை தொடர்வதில் தான் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அதிபர் ஒமர் அல் பஷீர் கூறியுள்ளார். (32)

# மாணவர்களிடையே மோதல்; 15 பேர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் உள்ள இரு பிரபல பாடசாலை மாணவர்கள் சிலருக்கிடையே நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

தனியார் பயணிகள் பேருந்து ஒன்றில் பயணம் செய்த ஒரு பாடசாலையின் மாணவர்கள் வேறொரு பாடசாலை மாணவர்களால் இடை நிறுத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸ் தலைமைக்காரியாலய பரிசோதகர் என். ஆர். மெண்டிஸ், தெரிவித்தார்.

கல்லூரி மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்தைக் கேள்வியுற்ற பொலிசார் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் 15 மாணவர்களைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மோதல் காரணமாக காலி வீதியின் போக்குவரத்துக்கள் சிறிது நேரம் இடம்பெறவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர். பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் தெஹிவளை மற்றும் மொறட்டுவவைச் சேர்ந்தவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காசோலை மோசடியில் ஈடுபட்டவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிற்குச் சொந்தமான 2,650 ரூபா பெறுமதியான காசோலையை 985,000 ரூபாவாக மாற்ற முற்பட்டமை மற்றும் களவாடப்பட்ட 972,000 பெறுமதியான காசோலையொன்றை மாற்ற முற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் கணக்காளர் செய்த முறைப்பாட்டிற்கமைய வத்தளையைச் சேர்ந்த சந்தேக நபரான ஆர். சிறிமணியை கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவினர் கைது செய்து கோட்டை நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர். சந்தேக நபர் வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சு உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகளை விநியோகிக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2,650 ரூபா பெறுமதியான காசோலையில் 985,000 ரூபா என மாற்றம் செய்து அதனை மாற்றியிருப்பதாகவும், 972,000 ரூபா பெறுமதியான மற்றொரு காசோலையை மாற்ற முற்பட்டுள்ளார் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வவுனியா–சாலம்பைக்குளம் மக்கள் மீளக்குடியமர நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா சாலம்பைகுளம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளகுடியமர்த்துவதற்கு சகல விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருப்பதாக வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாட் பதீயுதீன் தெரிவித்துள்ளார்

1990 ஆண்டு இடம் பெயர்ந்த மக்கள் தற்போது கிக்கிரிகொல்லாவ பகுதியில் இருக்கும் நலன்புரி நிலையத்தில் வாழ்நது வருகிறார்கள். இந்த மக்களை மீள குடியமர்த்துவது சம்பந்தமான வேலைத்திட்டங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனை வன்னி புனர்வாழ்வு அமைச்சர், வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ் சன்முகம், வவுனியா பிரதேச செயலாளர் செல்வி துரைசாமி ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் கனரகவாகனத்தின் உதவியுடன் காடுகள் துப்புரவு செய்யும் பணியினையும் ஆரம்பித்து வைத்தனர்.

1990 ஆண்டு இடம் பெயரும் போது 210 குடும்பங்கள் வாழ்ந்து வந்த போதும் தற்போது இப்பகுதியில் மீள குடியமர்வதற்கு 502 குடும்பங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இராணுவ நடவடிக்கையின் போது இப்பகுதியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மீள் குடியமர்வு நிதியாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை பாரம்பரியாமாக இருந்து வரும் சாலம்பைகுளத்தினை அப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் "அமவத்த" என்று பெயரை மாற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# கறுப்பு – வெள்ளை அடையாள அட்டை விநியோகம் முற்றாக நிறுத்தம்!

(கொழும்பு)

இந்த மாத முதல் வாரத்திலிருந்து கறுப்பு வெள்ளை அடையாள அட்டைகள் விநியோகிப்பதனை முற்றாக நிறுத்தி விடத் தீர்மானித்திருப்பதாக சிறிலங்கா ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு கறுப்பு - வெள்ளை அடையாள அட்டை வழங்குவதற்குப் பதிலாக வர்ண ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை வழங்க திணைக்களம் தீர்மானித்திருப்பதாக அதன் ஆணையாளர் எச். கே. கீதசேன தெரிவித்தார்.

யூலைமாதம் விண்ணப்பித்தவர்களுக்கு கறுப்பு - வெள்ளை நிற அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இனிமேல் விண்ணப்பிப்பவர்கள் வர்ண ஒளிப்படத்துடனான அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே வர்ண ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்கும் கிராம சேவகர்களுக்கும், வழங்கப்பட்டுள்ளன.

மக்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க பிரதேச செயலாளர்களினூடாக கிராம சேவகர்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களம் இதுவரை 200 வர்ண ஒளிப்பட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் நாளொன்றுக்கு ஆயிரம் வர்ண அடையாள அட்டைகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும்

## -ஐ.தே.க பா.உ ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கவை மேல்நீதிமன்றம் நிரபராதி என தீர்ப்பளித்து விடுதலை செய்ததன் பின்னராவது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தனது சுயாதீனத் தன்மையைக் காட்டிக்கொடுக்காது செயற்பட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறுமென தாங்கள் நம்புவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு நீதித்துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் வீழ்ச்சி கண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் எஸ்.பி.திஸாநாயக்கவை இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து நிரபராதி என கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி றோகினி பெரேரா வழங்கிய தீர்ப்பானது துணிச்சலான தீர்ப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பொய்யான முறைப்பாடுகளைச் செய்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை சிறைக்கு அனுப்பும் நடவடிக்கைகளை எடுத்தது இது முதல் தடவையல்ல என்று குறிப்பிட்ட ராஜித சேனாரத்ன, எஸ்.பி திஸாநாயக்கவைப் போன்று கட்சியில் மற்றும் சில உறுப்பினர்களுக்கு எதிராகவும் இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி நிதியை தனியார் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டமை தொடர்பாக எஸ்.பி திஸாநாயக்க மீது முன்னர் குற்றம் சுமத்தப்பட்டது. எனினும் எஸ்.பி திஸாநாயக்கவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த ஒருவரையோ அவருக்கு எதிராக அனுப்பப்பட்ட கடிதமொன்றையோ ஆணைக்குழுவினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் நாட்டின் உயர் தலைவர்கள் தொடர்புபட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கைது செய்ய இவ்வாறு திட்டமிட்டாலும், அமைச்சரவையிலிருக்கும் சில அமைச்சர்களுக்கு எதிராக சாட்சிகளுடன் ஆவணங்களைக் கையளித்து தான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் செய்த முறைப்பாடுகள் தொடர்பாக இதுவரை எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

### கிளி.யில்.

மேலாக பிள்ளையை மறுகரையில் தூக்கி இறக்கிவிட்டு தந்தையார் மதிலை ஏறிக்கடக்க எத்தனிக்கையில் மதில் சுவர் இடிந்து சிறுமி மீது விழுந்துள்ளது.

இடிபாட்டுக்குள் இருந்து சிறுமி உடனடியாக மீட்கப்பட்டு கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பொழுதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் வைத்தியசாலையில் சிறுமி மரணமானார்.

பரவிப்பாஞ்சானைச் சேர்ந்த சிவகுமார் நிதுஷா என்ற சிறுமியே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார்.

கிளி. மாவட்ட வைத்தியசாலையில் மரண விசாரணையினை மேற்கொண்ட கிளி. மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார். (சோ)

### பஞ்ச...

வெற்றிபெறச் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய முழு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

சிறிலங்காவின் இறைமையை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும். சிறிலங்காவின் தேசிய உரிமை இருப்பது இந்த நாட்டின் நாகரிகத்தைக் கட்டியெழுப்பிய சிங்களவர் களுக்கே என்பதை ஏற்றுக்கொள்வதுடன், ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொண்ட ஏனைய சிறுபான்மையினரினது உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளுடனோ ஏனைய பயங்கரவாத அமைப்புக்களுடனோ எந்தவிதமான உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை மற்றும் விகிதாசார தேர்தல் முறையில் தேவையான திருத்தங்களைச் செய்து நீதித்துறையின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கக்கூடிய அரசியலமைப்புத் திருத்தமொன்று செய்யப்பட வேண்டும்.

பௌத்த தர்மத்திற்கு அமைய தேசிய கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப செயற்படவேண்டும்.

இந்த பஞ்ச தர்ம கொள்கைகளை ஏற்றுக் கொள்வாராயின் கடந்த பொதுத்தேர்தலின்போது ஜாதிக ஹெல உறுமய பெற்றுக்கொண்ட ஆறு இலட்சம் வாக்குகளையும் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாட்லிய சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

### மக்கள்...

கிடைக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் இன்றும் ஆர்ப்பாட்டப் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கல்முனை வீடமைப்பு அதிகாரசபைக் காரியாலயம் முன்பாகவும் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து வீடமைப்பு அதிகார சபைக்கு 2001 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு பின்னர் 2002 ஆம் ஆண்டு பதவி நீக்கப்பட்ட இந்த ஊழியர்கள் மீண்டும் தம்மை நியமிக்கக் கோரும் அமைச்சரவை

த் தீர்மானத் தின்படி நியமனம் வழங்குமாறு கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். (32)

### மகிந்த...

துள்ளது. இது தொடர்பாக எதிர்வரும் எட்டாம் திகதி தாம் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தப்போவதாக கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது தேர்தல் வேட்பாளருக்கு ஆதரவாக சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது தொடர்பாக சனாதிபதி தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சி இன்று ஆராயவுள்ளது.

### அமெரிக்கா...

சரவையில் ஒப்படைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதுடன், கடந்த யூன் மாதம் 27ம் நாள் அது அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது. இந்தச் சட்ட மூலத்தின்படி நபர் ஒருவர் அவருடைய விருப்பத்துக்கு மாறாக மதமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டால் அது தண்டனைக் குரிய குற்றம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குற்றத்தின் தன்மையைப் பொறுத்துக் கடுமையான தண்டனைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.